
# பெண்

## வன்முறையற்ற வாழ்வை நோக்கி...

(ஒரு களப்பணியாளரின் அனுபவங்களிலிருந்து)

உ.வாசுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்:

## வன்முறையற்ற வாழ்வை நோக்கி ...

(ஒரு களப்பணியாளரின் அனுபவங்களிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிற பெண்ணிய நூல்கள்**

| | | |
|---|---|---|
| 10059 | பெண்ணியம் பேசலாம் வாங்க - உ. வாசுகி | 10 |
| 10061 | எதிரொலிக்கும் கரவொலிகள் -அ. மங்கை | 10 |
| 10062 | இஸ்லாமியப் பெண்ணியம் - ஹெச். ஜி.ரசூல் | 10 |
| 10063 | பெண் ஏன் அடிமையானாள்? - தந்தை பெரியார் | 25 |
| 10088 | கஸ்தூர்பா : மகாத்மாவின் மனைவி எழுப்பும் கேள்விகள் - மைதிலி சிவராமன் | 30 |
| 12281 | சாதியும் பால்நிலைப் பாகுபாடும் - உமா சக்ரவர்த்தி தமிழில்: வ. கீதா | 40 |
| 14867 | பெண்மை என்றொரு கற்பிதம் - ச. தமிழ்ச்செல்வன் | 20 |
| 15523 | சரிபாதி பெண்கள் சமமானவர்கள் தானா? - அஜிதா | 10 |
| 15913 | பாலின பாகுபாடும் சமூக அடையாளங்களும் - வ.கீதா, கிறிஸ்டி சுபத்ரா | 80 |
| 15912 | ஒரு வாழ்க்கையின் துகள்கள் - மைதிலி சிவராமன் | 100 |
| 17017 | பெண்ணெழுத்து களமும் அரசியலும் ச. விஜயலட்சுமி | 70 |
| 17046 | பெண்: வரலாறும் விடுதலைக்கான போராட்டமும் - பி.எஸ். சந்திரபாபு, திலகவதி | 395 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்:

## வன்முறையற்ற வாழ்வை நோக்கி ...

### (ஒரு களப்பணியாளரின் அனுபவங்களிலிருந்து)

உ. வாசுகி

பாரதி
புத்தகாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PEN: VANMURAIYATRA VAZHVAI NOKKI...**

**U.VASUKI**

First Published: January, 2013 | 2nd Edition: March, 2013

**Published by**

**BHARATHI PUTHAKALAYAM**

421, Anna Salai, Teynampet, Chennai - 600 018
Email: thamizhbooks@gmail.com
www.thamizhbooks.com

**பெண்: வன்முறையற்ற வாழ்வை நோக்கி ...**

**(ஒரு களப்பணியாளரின் அனுபவங்களிலிருந்து)**

**உ. வாசுகி**

*முதல் பதிப்பு: ஜனவரி, 2013 | இரண்டாம் பதிப்பு: மார்ச், 2013*

**வெளியீடு:**

**பாரதி புத்தகாலயம்**

*421, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018*
*தொலைபேசி : 044 24332424, 24332924, 24339024*

**விற்பனை நிலையம்**

7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018

**திருவல்லிக்கேணி:** 48, தேரடி தெரு | **வடபழனி** பஸ்நிலையம் அருகில், ஆனந்தபவன் மாடி
**பெரம்பூர்:** 52, கூக்ஸ் ரோடு | **ஈரோடு:** 39, ஸ்டேட் பாங்க் சாலை,
**திண்டுக்கல்:** 3சி18, எல்.பி.ஜி. காம்பவுண்ட் | **நாகை: 1,** ஆரியபத்திரபிள்ளை தெரு
**திருப்பூர்:** 447, அவினாசி சாலை | **திருவாரூர்:** 35, நேதாஜி சாலை
**சேலம்:** 36/1 அத்வைத ஆஸ்ரமம் சாலை | **மயிலாடுதுறை:** ரசாக் டவர், 1J, கச்சேரி சாலை
**அருப்புக்கோட்டை:** 31, அகமுடையார் மகால் | **புதுக்கோட்டை:** வடக்கு ராஜா வீதி
**மதுரை:** 37A, பெரியார் பேருந்து நிலையம் | **மதுரை:** சர்வோதயா மெயின்ரோடு, மகபூப்பாளையம் | **குன்னூர்:** N.K.N வணிகவளாகம் பெட்போர்ட்
**செங்கற்பட்டு:1** டி., ஜி.எஸ்.டி சாலை | **விழுப்புரம்:** 26/1, பவானி தெரு
**திருநெல்வேலி:** 25A, ராஜேந்திரநகர் முதல் தெரு, | **விருதுநகர்:** 131, கச்சேரி சாலை
**கும்பகோணம்:** 352, பச்சையப்பன் தெரு | **வேலூர்:** S.P. Plaza 264, பேஸ் II, சத்துவாச்சாரி **நெய்வேலி:** பேருந்து நிலையம் அருகில், சிஐடியு அலுவலகம்
**தஞ்சாவூர்:** காந்திஜி வணிக வளாகம் காந்திஜி சாலை | **தேனி:** 12,பி, மீனாட்சி அம்மாள் சந்து, இடமால் தெரு | **கடலூர்:** பாரதி பஜார், பழைய அண்ணா மேம்பாலம்
**நாகர்கோவில்:** கேவ் தெரு, போத்தி பள்ளி ஜங்ஷன்
**கோவை:** 77, மசக்காளிபாளையம் ரோடு, பீளமேடு | **திருச்சி:** வெண்மணி இல்லம், கரூர் புறவழிச்சாலை | **திருவண்ணாமலை:** முத்தம்மாள் நகர், ITI opp. வேங்கிக்கால்

ரூ.25/-

அச்சு : பிரிண்ட்டெக் சென்னை - 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

வாழ்க்கை குறித்த கனவும், எதிர்பார்ப்பும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். அவரவர் வாழ்நிலையில் நின்று, அதைவிட உயரத்துக்குப் போக வேண்டும் என்பது தான் பொதுவான கனவாக இருக்கும். அதே சமயம், தன்னைக் குறித்து மட்டுமல்ல, சமூகம் குறித்தும் பலர் சிந்தித்தனர்; கனவு கண்டனர். மனிதர்களுக்குக் காணி நிலம் வேண்டும் என்று பாரதி கனவு கண்டான். அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேண்டும் என்று ஸ்பார்ட்டகஸ் கலகம் செய்தான். மனிதகுலம் சுரண்டலிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று மாமேதை கார்ல்மார்க்ஸ் ஒரு தத்துவத்தையே படைத்தார். பெண்விடுதலை வேண்டும் என்று பல சிந்தனையாளர்கள் விரும்பினர். இந்தியாவிலும், தமிழகத்திலும் மண் விடுதலை, பெண் விடுதலை என்று இரண்டையும் இணைத்துக் குரல் கொடுத்தவர்கள் பலர் பொதுவுடமை இயக்கத் தலைவர்கள். பெரியாரின் முழக்கமும், நடவடிக்கையும் தமிழகத்தின் சமூக சீர்திருத்த வரலாற்றின் பிரிக்க முடியாத பகுதிகள். சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக அம்பேத்கர் போராடினார். வர்க்கமும், சாதியும் இந்திய சமூகக் கட்டமைப்பில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இரண்டு வித ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் போராடினார்கள்.

இத்தகைய பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கும், சிந்தனைகளுக்கும் அடித்தளமாக இருப்பது ஏதோ ஒரு வித அடக்குமுறை, ஒடுக்குமுறை, பிரச்னை. அதிலிருந்து விடுபட வேண்டுமென்ற வேட்கையும், உந்துதலும் தான் விடுதலைக்கு முதல் படியாக அமைகிறது. ஒடுக்குமுறையின் ஒரு முக்கிய புள்ளியாக வன்முறை அமைந்திருக்கிறது. ஆதிக்கத்தை, ஆளுமையை, அதிகாரத்தை நிலைநாட்ட எப்போதுமே வன்முறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதற்கு நியாயமும் கற்பிக்கப் பட்டிருக்கிறது. எனவே, வன்முறைக்கு எதிரான போராட்டம், அதற்குப் பின்னாலுள்ள ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாகக் கட்டமைக்கப்பட வேண்டும்.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் தெலுங்கானா பகுதியில் 1930களில் துவங்கிய விவசாயிகள் எழுச்சி, துவக்கத்தில் அநியாய தண்டலையும், வெட்டி உழைப்பு என்ற பெயரில் நடந்த உழைப்பு சுரண்டலையும் எதிர்த்தே நடந்தது. கம்யூனிஸ்டுகள் தலைமையேற்ற பிறகு, அது ஜமீந்தாரி ஒழிப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, நிசாமின் கொடுங்கோலாட்சி எதிர்ப்பு, தேச விடுதலைக்கான போராட்டமாக மாறியது. ஆக, ஒரு ஒடுக்குமுறை கட்டமைப்பு இருக்கும் போது, அதன் வெளிப்பாடாக பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்கள் வரும். அவற்றை எதிர்த்துக் கோபமும் பொங்கும். அதனை, கட்டமைப்புக்கு எதிரான கோபமாக மாற்ற வேண்டும். கட்டமைப்பு மாற்றப் படும் போது தான் அதன் வெளிப்பாடும் நின்று போகும்.

பெண்கள் மீதான வன்முறையையும் இந்தப் பின்னணியிலேயே பார்க்க வேண்டும். இந்தியாவில் குடிமகள் என்ற அடிப்படையில் எழும் பொது ஒடுக்குமுறையோடு, சாதி, வர்க்கம், பாலினம் ஆகிய 3 மட்டங்களில் பெண் ஒடுக்கப் படுகிறாள். இந்த ஒடுக்குமுறைக்கு ஆணாதிக்கம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் முக்கிய காரணிகளாக அமைகின்றன. அனைத்து மட்டங்களிலும், அவள் மீது வன்முறை பிரயோகிக்கப் படுகிறது. எனவே, வன்முறைக்கு எதிரான பொதுக் கருத்தும், பொது கோபமும் உருவாக்கப் படுவதோடு, எதை நிலைநிறுத்த வன்முறை பயன்படுகிறதோ அந்த ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான உணர்வாகவும் அதை மாற்ற வேண்டிய தேவை இருக்கிறது. எவையெல்லாம் காரணிகளாக உள்ளனவோ, அவற்றைத் தகர்க்கவும் போராட வேண்டியிருக்கிறது. அதாவது, வன்முறை என்பது நோயின் வெளிப்பாடு. **"நோய் நாடி, நோய் முதல் நாடி அது தனிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்"** என்ற குறளுக்கேற்ப, நோயாய் பீடித்திருக்கின்ற ஆணாதிக்கம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகியவற்றை அழித்தொழிக்க வேண்டும்.

இதை விடுத்து, மேற்கத்திய கலாச்சாரம் ஊடுருவி விட்டதால் தான் பாலியல் வன்முறை நடக்கிறது, எனவே பாரத கலாச்சாரம் உயர்த்திப் பிடிக்கப் பட வேண்டும் என்று மதவாத அமைப்புகள் திசை திருப்புகின்றன. இந்தியா பன்முகக் கலாச்சாரம் கொண்ட நாடு என்பதையும், இந்தக் கலாச்சாரங்களிலும் பாலின பாகுபாடு நிலவுகிறது என்பதையும் வசதியாக இந்த வாதம் மறைத்து விடுகிறது. நமது நாடோ, பிற நாடோ, கலாச்சாரங்களின் நல்ல பண்புகளை எடுத்துக் கொள்வதும், இழிவானவற்றை நிராகரிப்பதும் தான் இன்றைய தேவை. நரி உபதேசம் செய்கிறது என்றால், கோழிகள் மீது ஒரு கண் இருக்கட்டும் என்று சொல்லுவார்கள். எனவே, மதவாத சக்திகள் உபதேசம் செய்யும் போது, மதச்சார்பின்மை, சமத்துவம், ஜனநாயகம் போன்ற மாண்புகள் மீது கவனம் வேண்டும்.

இந்தப் பிரசுரத்தில், பல மட்டங்களில் பெண்கள், குழந்தைகள் மீது பாயும் வன்முறை குறித்தும், அதைத் தடுக்க என்ன செய்யலாம் என்ற ஆலோசனைகள் குறித்தும் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் துவக்க காலத்திலிருந்து அதில் இணைந்து செயலாற்றி வரும் அனுபவமும், மார்க்சீய புரிதலும் தான் இந்தப் பிரசுரத்தை சாத்தியமாக்கியுள்ளது.

**உ. வாசுகி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எங்கே இருக்கிறோம்?

டெல்லியில் கடந்த டிசம்பர் 16ம் தேதி, 23 வயது இளம் கல்லூரி மாணவி, ஓடும் பேருந்தில் மிகவும் கொடூரமான முறையில் கும்பல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் கடுமையான அதிர்ச்சி அலைகளை நாடு முழுதும் ஏற்படுத்தியது. இந்தியாவின் இதயத் துடிப்பே சில நிமிடங்கள் நின்று போனது. வேட்டை நாய்கள் குத்திக் கிழிப்பதைப் போல, அப்பெண்ணும், அவள் நண்பரும் அடித்து நொறுக்கப்பட்டனர். அந்தப் பெண்ணின் குடலின் பெரும்பகுதி அழுகி, குடலையே எடுத்து விடும் அளவுக்கு வன்முறை நடந்திருக்கிறது. ஆடைகளையும் அகற்றி விட்டு, நிர்வாணமாகப் பேருந்திலிருந்து இருவரும் வீதியில் வீசி எறியப் பட்டனர். பல்வேறு வன்முறைகளை சகித்துக் கொண்டே இருக்கும் மக்கள் பலரை, துணிகரமான இக்கொடுமை சகிப்பு எல்லைக்கு வெளியே தள்ளி, கொதி நிலையை எட்ட வைத்தது. வரலாறு காணாத அளவு, 50000க்கும் அதிகமானோர் நீதி கேட்டு, பல நாட்கள் சாலைகளில் இறங்கிப் போராடினர். முன் வந்த பல கோரிக்கைகள், இத்தனை காலமும் மாதர் இயக்கங்களால் பலமுறை பேசப் பட்டவையாகும் என்று பார்க்கும் போது, பெண்கள் அமைப்புகளின் போராட்டம் வீண் போகவில்லை என்பது புரிகிறது.

பொங்கி எழுந்த எதிர்ப்பில், நிர்வாகமும், காவல்துறையும் கிடுகிடுத்தன. மத்திய அரசு திக்குமுக்காடியது. தேவையான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர, ஜே.எஸ்.வர்மா தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப் பட்டுள்ளது. சுதந்திர இந்தியாவில் முதன் முறையாக, தேசிய வளர்ச்சி கவுன்சிலில் பெண்கள் மீதான வன்முறை குறித்துப் பேசப்பட்டது. வன்முறை பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்பதும், பெண்ணின் வளர்ச்சியும் இணைந்ததே தேசிய வளர்ச்சி என்பதும் 65 ஆண்டுகள் கழித்தே உணரப்பட்டிருக்கிறது என்பது வெட்கக் கேடான விஷயம்.

இந்தப் பாலியல் வன்புணர்வு குற்றம், கடந்த ஆண்டு டெல்லியில் நடந்த 635வது பாலியல் வன்புணர்வு குற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

634 நடந்த போதெல்லாம் மக்கள் மத்தியில் எதிர்ப்பு வரவில்லையே என்று கேட்பதை விட, 634 நடக்கிற வரை டெல்லி அரசும், காவல்துறையும் என்ன கிழித்துக் கொண்டிருந்தன என்று கேட்பதே பொருத்தமாக இருக்கும். மக்கள் தெருவுக்கு வந்தால் தான், அரசு தன் கடமையை ஆற்றும் என்ற நிலை ஆட்சி பற்றாக்குறையையே (governance deficit) காட்டுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் வருடத்துக்கு சராசரியாக 20,000 பாலியல் குற்றங்கள் இந்தியாவில் பதிவு செய்யப் படுகின்றன. பதிவு செய்யப் படாமல் போகும் சம்பவங்கள் இன்னும் எத்தனையோ? ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்ட அமைப்பு, பாலின சமத்துவமின்மை குறித்து 187 நாடுகள் மத்தியில் நடத்திய ஓர் ஆய்வில், இந்தியாவுக்கு 134ம் இடம் கிடைத்திருக்கிறது. த கார்டியன் பத்திரிகை ஒரு படி மேலே போய், ஜி20 நாடுகளிலேயே இந்தியா தான், பெண்கள் இருப்பதற்குத் தகுதியற்ற இடமாக இருக்கிறது எனக் குற்றம் சாட்டுகிறது. தாம்சன் ராய்ட்டர்ஸ் பெண்களுக்கான சட்டம் குறித்த அறக்கட்டளை, பெண்களுக்கான அபாயகரமான நாடுகள் என்ற பட்டியலில், ஆப்கானிஸ்தான், காங்கோ, சோமாலியா போன்ற நாடுகளின் வரிசையில் இந்தியாவை வைக்கிறது. அதாவது, இந்தியாவில் பாலின அசமத்துவம் ஆழமாக வேரூன்றியுள்ளது. இந்த சமத்துவமற்ற நிலையை மாற்ற தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய சிந்தனையும், பல்முனை நடவடிக்கைகளும் அவசியம். சட்டத் திருத்தம் குறித்து மட்டும் யோசிப்பது சங்கதியைத் தீர்க்காது.

**குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை:**

குழந்தைகள் மீது பல்வகை வன்முறைகள் நிலவுகின்றன. வகுப்பறை வன்முறை, குடும்ப வன்முறை என்று பலவும் இருந்தாலும், பாலியல் வன்முறையே இங்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது. சமீபத்திய ஆய்வு ஒன்று, இந்தியக் குழந்தைகளில் 53% பேர், ஏதோ ஒரு வித பாலியல் தாக்குதலுக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுகிறது. இது பதற வைக்கும் செய்தி அல்லவா?

"குழந்தைகள் மீதான பாலியல் சீண்டல் ஏன் நடக்கிறது என்றால், அது குறித்து பெரும்பாலும் மௌனமே நிலவுவதால் தான். பாலியல் சீண்டல், குழந்தைகளை ஒடுக்குகிறது. ஒடுக்கப் பட்ட குழந்தைகளைக் கொண்ட சமூகம், பொருளாதார ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ, சமத்துவ ரீதியாகவோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ரீதியாகவோ செழித்து வளராது" (பிட்டர் சாக்கலேட் பிங்கி விரானி எழுதிய புத்தகம்)

ஐக்கிய நாடுகள் சபை உறுதி செய்துள்ள குழந்தைகளின் உரிமைகள் அனைத்தையும் தவிடு பொடியாக்குவது பாலியல் வன்முறை என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. குடும்ப உறுப்பினர்களால், உறவினர்களால், ஊர்காரர்களால், ஆசிரியர்களால், சக மாணவர்களால், வேலை தல பொறுப்பாளர் களால் பெரும்பாலான பாலியல் வன்முறை நிகழ்த்தப் படுகிறது என்பது நம்மை உறைய வைக்கும் உண்மை. சொந்த அப்பாவும், சகோதரனும் கூட குற்றவாளிகளாக மாறியுள்ள கசப்பான சம்பவங்களும் கணிசமாக அதிகரித்து வருகின்றன.

**எது பாதுகாப்பான இடம்?**

**குடும்பமா?**

திண்டுக்கல்லில் 10 வருடங்களுக்கு முன் ஒரு பெண் மருத்துவர் கூறினார் "பள்ளி சீருடையில் ஒரு 12 வயது குழந்தையை, அவள் அம்மா அழைத்து வந்தார். வயித்து வலின்னு அழுவுதுங்க, என்னன்னு பாருங்க என்று வேண்டுகோள் விடுத்தார். மேடாகப் பருத்திருந்த வயிறைப் பார்க்கும் போதே எழுந்த சந்தேகம், பரிசோதித்து முடித்த போது தெளிவாகி விட்டது. ஆம், அந்தக் குழந்தை கர்ப்பமடைந்திருந்தது. மிரட்டிக் கேட்ட போது, அவளை விட சற்றே வயதில் மூத்த அண்ணன் தான் காரணம் என்று சலனமில்லாமல் கூறியது. யம்மா, தக்குனியூண்டு வூட்ல தாம்மா இருக்கோம், சின்ன புள்ளைங்கன்னு நெனச்சு பக்கம் பக்கம் படுக்க வச்சேனே, இந்தக் கொடுமைய எங்க போய் சொல்ல என்று, அந்தத் தாய் கதறி அழுதார்."

கேரளாவில், 13 வயது பெண்ணை, இரண்டு வருட காலமாக அவள் தந்தை, சகோதரன், மாமா ஆகியோர் பாலியல் உறவுக்குப் பயன்படுத்தி வந்தார்கள் என்பது அண்மைக்கால செய்தி. விழுப்புரம் மாவட்டத்தில் தவறாக நடக்க முயற்சி செய்த தந்தையை எச்சரிக்கை செய்த மகள் பார்கவியிடம், என் விருப்பத்துக்கு மாறாக நடந்ததால் 3 பேரைக் கொன்னு புதைச்சிருக்கேன், உனக்கும் அந்த கதி வேணுமா என்று அவர் மிரட்டிய விவகாரம் தொலைக்காட்சியில் வெளியானதே! மதுரையில், மகளிடம் பாலியல் தொந்தரவு செய்த கணவனைத் தடுக்க கெஞ்சிக் கூத்தாடியும், குடிவெறியில் இருந்தவரை வேறு எதுவுமே செய்ய முடியாமல், அருகில் கிடந்த கிரிக்கெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டையால் ஒரு போடு போட, அவர் இறந்தே விட்டார். இதைக் கொலை என்று சொல்லி விட முடியுமா? இபிகோ 100 என்ற பிரிவைப் பயன்படுத்தி (தற்காப்பு நடவடிக்கை) மதுரை காவல்துறை, அந்த மனைவியை விடுவிக்க முயற்சித்து வருகிறது.

நாகரிக சமூக வளர்ச்சியின் ஒரு பகுதியாக வரையறுக்கப்பட்ட குடும்ப உறவுகள் இன்று சிதைந்து கொண்டிருக்கின்றன. ஏனெனில், குடும்பம் என்ற கட்டமைப்பு, ஆணாதிக்கத்தை மையமாக வைத்தே செயல்படுகிறது. குடும்ப ஜனநாயகம் இன்னும் கோஷமாகவே தான் இருக்கிறது. கலந்துரையாடல், உரிமைகள் அங்கீகரிக்கப்படுதல், பேசித் தீர்த்தல் என்பதெல்லாம் இல்லாத இந்தக் கட்டமைப்பில், உறவுகள் சீர்குலைவது சுலபமாக நடக்கிறது.

வீடு தான் பொதுவாகப் பாதுகாப்பான இடம் என்று கருதப் பட்டது. ஆனால் அதுவும் பாலியல் வன்முறைக்கு அப்பாற் பட்டதாக இல்லை என்பது மேலே கூறப்பட்டவை போன்ற பல சம்பவங்களிலிருந்து தெரிய வருகிறது.

**கல்வி நிலையமா?**

அடுத்த பாதுகாப்பான இடம், குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுகிற முக்கிய இடம் என்பது பள்ளி தான் எனக் கருதப் படுகிறது. சில சமயம் பெற்றோர்கள் சொல்வதைக் கூட குழந்தைகள் கேட்க மறுக்கும், எங்க டீச்சர் சொன்னாங்க, சார் சொன்னாரு என்று ஆசிரியர்கள் கூறுவதை வேத வாக்காக எண்ணும் வழக்கம் குழந்தைகளிடம் உண்டு.

எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது முதுமொழி. கடவுளாக இல்லா விட்டாலும் பரவாயில்லை, ஆனால் கிரிமினலாக இருந்து விட்டால்? எத்தனையோ ஆசிரியர்கள், மாணவர்களை மனிதர்களாக உருவாக்குகிறார்கள். நல்ல பண்புகளை வளர்க்கிறார்கள். நல்லாசிரியர்கள் நமது சமூகத்தின் சொத்து. ஆனால், ஆசிரியர் சமூகத்தில் உள்ள புல்லுருவிகள் சிலர், விளையும் பயிரை முளையிலே கருக வைக்கிறார்கள். வறுமையின் கோரப் பிடியிலும் கூட, படிக்க வேண்டும் என்ற உறுதியுடனும், கனவுகளுடனும் வரும் இளம் பிஞ்சுகளை இம்சை செய்கிறார்கள்.

மதுரை மாவட்டம் பொதும்பு துவங்கி, விருதுநகர், விழுப்புரம், நாகை, கடலூர் வரை, பள்ளி மாணவிகள், கல்வி நிலையங்களில் பாலியல் சீண்டலுக்கு ஆளாக்கப்பட்ட விவரங்கள் பத்திரிகைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்தன. இவற்றில் பல சம்பவங்களில், ஜனநாயக மாதர் சங்கம் தலையிட்டுப் போராடியதால், விவரங்கள் தெரிய வந்தன. தெரிந்தவற்றைப் பற்றியும் முழுமையாக எழுத முடியாது, அவ்வளவு மோசமான நடவடிக்கைகள்.

மாதர் சங்கம் அண்மையில் நடத்திய மாநில அளவிலான ஆய்வில் பதைக்க வைக்கும் பல தகவல்கள் கிடைத்தன. பள்ளி செல்லும் போது வழியில், தெருக்களில், பயணம் செய்யும் பேருந்துகளில், தனி வாகனங்களில் என்று எங்கும் நீக்கமற இந்தக் குற்றங்கள் நடக்கின்றன. நிரம்பி வழியும் பேருந்துகளில் ஏறும் நேரம் துவங்கி இறங்கும் வரை, பாலியல் துன்புறுத்தலால் நெளிந்து கொண்டே குழந்தைகள் பயணிக்கும் கொடுமையை, காலை நேர வேகத்தில் எத்தனை பேர் கவனிக்கிறார்கள் என்று தெரியவில்லை. பட்டும் படாமல் இடிப்பது தானே, நாங்கள் பார்த்திருக்கிறோம் என்று சொல்லலாம். இடிப்பது என்பது நடக்கிற கொடுமைகளில் மிகக் குறைவான கொடுமை. படு கேவலமான நடவடிக்கைகளில் சிலர் இறங்குவார்கள். துரதிர்ஷ்டவசமாக, அவற்றையெல்லாம் அச்சில் ஏற்ற முடியாது. நெரிசல் நேரத்தில் பேருந்துகளை அதிகரிப்பது, அச்சமயங்களில் காவலர்கள் பேருந்துகளில் பயணித்துக் கண்காணிப்பது, தேவைப்படும் தடங்களில் மகளிர் மட்டும் பேருந்துகளைக் குறித்த நேரத்தில் விடுவது போன்ற நடவடிக்கைகளை எடுத்தாலே, இவற்றைத் தடுத்து நிறுத்தி விடலாம்.

இதுவும் தவிர, பள்ளிகளில் ஆசிரியர்களால், இதர ஊழியர்களால் பாலியல் துன்புறுத்தல்களும், வன்கொடுமைகளும் நடக்கின்றன. இணங்கா விட்டால், தேர்வில் தோல்வியுறச் செய்து விடுவதாகவும், நன்னடத்தை சான்றிதழில் கை வைத்து விடுவதாகவும் மிரட்டப் படுகிறார்கள். பள்ளிக்கூடம் கிளம்ப வேண்டும் என்றாலே இனம் புரியாத பீதி வந்து விடும். போகாமலும் இருக்க முடியாது.

பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நடவடிக்கைகளிலிருந்து, குடும்பத்தினர் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். திடீரென பள்ளி செல்ல மறுப்பது, எதையோ பறி கொடுத்தாற் போல் இருப்பது, சொல்ல முடியாமல் வேதனை படுவது, பயப்படுவது போன்ற பல வெளிப்பாடுகள் இருக்கும். உரிய முறையில் புரிந்து கொண்டு உண்மை நிகழ்வை வெளிக்கொண்டு வர வேண்டும். வெளியே சொன்னால் அவமானம் இல்லை, யாரும் கோபப்பட மாட்டார்கள் என்ற நம்பிக்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க வேண்டும். இது பெற்றோரும், குடும்ப நண்பர்களும் கண்டிப்பாக செய்ய வேண்டிய வேலை. இதை விட்டு விட்டு, குழந்தையைப் பள்ளியிலிருந்து நிறுத்துவது சரியான தீர்வல்ல.

உயர் வகுப்புகள், கல்லூரிகளிலும் இந்தப் பிரச்னை உண்டு. குறிப்பாக ஆராய்ச்சி மாணவியர் சிலர், கைடாக இருக்கும் பேராசிரியரிடம் இந்த வன்முறைக்கு உள்ளாகிறார்கள்.

பாலியல் சீண்டல், இம்சை மட்டுமல்ல, சிறுமிகள் பாலியல் பலாத்காரம் செய்யப் பட்டுக் கொலையும் செய்யப் படுகிற ஏராளமான செய்திகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**காவல்துறையும், கல்வித்துறையும்:**
**அறிவுரைகள் ஏராளம்:**

பிரச்னை என்று வந்தபிறகு காவல்துறையிடமும், கல்வித்துறையிடமும் புகார் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கு அக்கம்பக்கத்தினர் துணை நிற்க வேண்டும். பொதுவாக, ஊர் பேரு கெட்டுப்போயிரும், ஸ்கூல் பேரு கெட்டுப் போயிரும், எல்லா புள்ளைங்களையும் மோசமா நெனச்சுருவாங்க என்கிற காரணங்களால் சில சமயம் ஊர்மக்கள், புகார் கொடுக்க வேண்டாம் என்று பெற்றோருக்கு அறிவுரை கூறுவார்கள். சில சம்பவங்களில், தவறு செய்த ஆசிரியர் பணம் கொடுத்தோ, வேறு உதவிகள் செய்தோ, உள்ளூர் வெளியூர் விவகாரமாக்கியோ, சாதியைச் சொல்லியோ ஊர் மக்களில் செல்வாக்குள்ள பகுதியினரைத் தம்பக்கம் வைத்துக் கொள்வார்கள். பொதும்பில் இதைப் பார்த்தோம். அண்மையில் மதுரை புறநகரின் ஒரு பகுதியில், இத்தகைய ஒரு சம்பவத்தில் தலையீடு செய்ததற்காக, மாதர் சங்கத்தினரைக் கைது செய் என்று கோஷம் எழுப்பியதோடு, மக்களின் ஒரு பகுதி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சங்கத்துக்கு எதிராக மனுவே கொடுத்தது. இதர ஆசிரியர்கள் கூட, பொதுவாகக் குழந்தைகளுக்கு ஆதரவு கொடுப்பது கிடையாது. சார பத்தி நீ இப்படி புகார் குடுத்து கேவல படுத்திட்டியே என்று, புகார் கொடுத்தது தான் மாபெரும் தப்பு என்பதாக ஆக்கி விடுகிறார்கள்.

பல சமயங்களில் பஞ்சாயத்து தலைவர்கள் புகார் கொடுப்பதைத் தடுப்பவராகவே உள்ளனர். விழுப்புரம் கண்டமங்கலம் சம்பவத்திலும், நாகை தலைஞாயிறு சம்பவத்திலும் இது முன்னுக்கு வந்தது. பல வருடங்களுக்கு முன், ராணிப்பேட்டை பகுதியில் 4 வயது சிறுமி ஒருத்தி வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப் பட்ட சம்பவத்தில், தந்தை, பஞ்சாயத்திடம் புகார் கொடுத்தார். பஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயத்து கூடி, வெறும் ரூ.200 அபராதம் விதித்து, அதையும் பஞ் சாயத்துக்குக் கொடுத்து விட வேண்டும் என்று தீர்ப்பளித்தது. நாட்டாமை, தீர்ப்ப மாத்தி எழுது என்ற நம்முடைய குரலுக்கு ஆதரவு அன்றைக்குப் பெரிதாகக் கிடைக்கவில்லை.

இதையெல்லாம் மீறி, பெற்றோர் புகார் கொடுக்க முன் வந்தால், காவல் துறை, கல்வித்துறையின் அணுகுமுறை பொதுவாகப் படு மோசம். பொதும்பு சம்பவத்தில், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதிலிருந்து, குற்றவாளியைக் கைது செய்யும் வரை, பல கட்டப் போராட்டங்களும், நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கலும் செய்த பின் தான், காவல் துறையை அசைய வைக்க முடிந்தது. கடலூர் சங்கிலிக்குப்பத்தில், மாதர் சங்கப் புகாரை வாபஸ் வாங்குமாறு காவல் துறை பெரும் நெருக்கடி கொடுத்தது. அவர்களது பூர்வாங்க விசாரணையில் ஆசிரியர் தவறு செய்ததாகத் தெரியவில்லை என்றால், கோப்பை மூடி விடலாமே? எதற்கு புகாரை வாபஸ் வாங்க வேண்டும்? திருத்தங்கல் பிரச்னையில், பிடித்து வைத்திருந்த ஆசிரியரைப் பொதுமக்களிடமிருந்து காப்பாற்றும் திருப்பணியைத் தான் காவல் துறை செய்தது. சாத்தூரில், எஸ்பி. தலையிட்ட பிறகு தான், உள்ளூர் போலீஸ் அசைந்தது. "புகார் கொடுத்தால், உங்கள் பெண்ணின் எதிர்காலம் என்ன ஆகும்? ஆசிரியரை வேண்டுமானால் இட மாற்றம் செய்து விடலாம்" என்று கட்டப் பஞ்சாயத்து செய்வதும் ஆங்காங்கே நடக்கிறது.

சிறுமியின் எதிர்காலம் என்பது என்ன? மனநலம் பாதிக்கப் படுவதும், படிப்பு பாழாவதும் எதிர்காலம் சம்பந்தப்பட்டது இல்லையா? பெண்ணின் வாழ்க்கையே திருமணத்தைச் சுற்றித் தானா? அல்லது என்றைக்கோ நடக்கப் போகும் திருமணத்தைக் காரணம் காட்டி, குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கும் ஏற்பாடா? திருமணம் ஆன பின்னர் பாலியல் குற்றம் நடந்தால் மட்டுமே, எஃப்.ஐ.ஆர் பதிவு செய்ய வேண்டும் என்று சட்டம் சொல்லுகிறதா? குறிப்பாக, காவல்துறைக்கு புகார்களை இவ்வாறு ஊத்தி மூட என்ன அதிகாரம் இருக்கிறது? குற்றவாளியை இட மாற்றம் செய்வது, உடனடியாக, சிறுமிகளுக்குப் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் என்பது உண்மை தான். ஆனால், அதுவே தண்டனை என்று நினைத்து விடக் கூடாது. பிரச்சனையை முடித்துவிடவும் கூடாது.

**குற்றத்துக்குப் பதவி உயர்வா:**

கல்வித் துறையோ, வேறு ஏதோ உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. நடக்கிற சம்பவங்கள் எதுவுமே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை பாதிப்பது கிடையாது. குழந்தைகளின் பிரச்னை அவர்களின் வரையறையில் வருவது கிடையாது. பொதும்பு, திருத்தங்கல் பிரச்னைகளில் குற்றம் சாட்டப் பட்டவர்களைப் பாதுகாக்க மாவட்டக் கல்வித் துறை, ரொம்பவும் மெனக்கெட்டது. எஃப்.ஐ.ஆர். போடப்பட்ட ஒருவருக்கு, பதவி உயர்வு வேறு கொடுத்தது. மாதர் சங்கம் பொது நல வழக்கு தாக்கல் செய்ததில், உயர்நீதிமன்றம், அவரது பதவி உயர்வை ரத்து செய்ய வேண்டும் எனவும், இடை நீக்கம் முடிந்த பின்னர் கூட, குழந்தைகள் உள்ள இடத்தில் அவருக்குப் பணி அளிக்கக் கூடாது என்றும் உத்தரவு வழங்கியது. மாதர் அமைப்பின் விடாப்பிடியான தலையீட்டின் காரணமாக, பள்ளிக் கல்வித் துறை சமீபத்தில் ஒரு அரசாணையை வெளியிட்டிருக்கிறது. தவறு செய்யும் ஆசிரியர்கள் மீது உடனடியாக வேலைநீக்கம் உள்ளிட்ட கறாரான நடவடிக்கைகள், எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

**விடுதிகளில் நடக்கும் வேதனை:**

குழந்தைகளுக்குப் பாதுகாப்பு என்று நாம் கருதுகிற மற்றொரு இடமாக மாணவர் விடுதிகள் உள்ளன. ஆனால், சில இடங்களில் கொடுமை கோலோச்சுகிறது. விடுதி காப்பாளர்களால் குழந்தைகள் அச்சுறுத்தப் பட்டு, பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப் படுகிறார்கள். அனாதை ஆசிரமங்களில் கேட்க உறவினர் இல்லாத சூழலில், இக்கொடுமை பரவலாக நடக்கிறது. கிருஷ்ணகிரியில், சென்னையில், தூத்துக்குடியில், மதுரையில் என்று பல சம்பவங்கள் கண் முன் விரிகின்றன. சமூக நலத்துறையின் கண்காணிப்புக்கு (?) இவை மிகச் சிறந்த உதாரணங்கள்.

விருதுநகர் மாவட்டத்தில் ஒரு விடுதி காப்பாளரின் கணவரால் தொடர்ச்சியாக ஒரு சிறுமி வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு கர்ப்பமடைய, அது காட்டிக் கொடுத்து விடும் என்பதால், அது ரகசியமாகக் கலைக்கப் பட்டது. கருவுறுதலும், கருக்கலைப்பும் அச்சிறுமியின் உடலை உண்மையில் புண்ணாக்கியிருக்கும். கருக்கலைப்புக்குப் பிறகு, அச்சிறுமியை நடத்தியே விடுதிக்கு அழைத்து வந்துள்ளனர். எப்படியோ விவரம் தெரிந்து, மாதர் சங்கம் வழியிலேயே தடுத்து, தகராறு செய்து, இதைப் புகாராக்கியது. ஒரு மைனர் சிறுமிக்குக் கருக்கலைப்பு செய்தது சட்டப் படி குற்றம். ஆகவே, அந்த மருத்துவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிய போது, காவல்துறை மருத்துவரை விடுவிக்கவே ஆர்வம் காட்டியது. மகளிர் காவல் நிலைய ஆய்வாளர், பாதிக்கப் பட்ட பெண் கழிப்பறை செல்லும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட, கூடவே போய், புகாரில் மருத்துவரைப் பற்றிக் குறிப்பிட வேண்டாம் என்று வற்புறுத்தினார். இச்சூழலில், மருத்துவரை முதல் தகவல் அறிக்கையில் இணைக்கவே பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. ஆனால், பின்னர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட போது, மருத்துவர் பெயர் விடுபட்டிருந்தது.

தூத்துக்குடி மாவட்டத்தில், ஒரு விடுதியின் காப்பாளரைக் கண்டாலே குழந்தைகள் நடுங்குவார்கள். அவர் சிறுமியரை இறுக்கிக் கட்டிப்பிடிப்பதும், மூச்சு திணறி குழந்தைகள், விட்டுடுங்க சார் என்று கெஞ்சுவதும், அந்தத் துன்பத்தில் இவர் மகிழ்வதும் கேட்கும் போதே நம்மைக் குலை நடுங்க வைக்கிறது. கோபத்தில், ஒரு குழந்தையின் தந்தை அவரை அடிக்க, தந்தை மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இதே நபர் செய்யும் மற்றொரு கொடூரமான விஷயம் என்ன தெரியுமா? அவர் அறையில் கழிப்பறை இல்லை. எனவே, இரவு நேரத்தில் அறைக்குள்ளேயே மலஜலம் கழிப்பாராம். விடிந்தவுடன், மாணவர்கள் வந்து, அதை அள்ளி எடுத்து, சுத்தம் செய்ய வேண்டுமாம்.

பள்ளிகளுடன் இணைந்த விடுதிகளுக்குத் தனி உரிமம் தேவையில்லை என்பது தான் இன்றைய நிலை. இது மாற்றப் பட்டு, தனி விடுதி என்றாலும், பள்ளியுடன் இணைந்த விடுதி என்றாலும் உரிமம் கேட்டு விண்ணப்பிக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்க வேண்டும். அப்போது தான், அரசின் கண்காணிப்புக்கு அவை வரும். சமூக நலத்துறை அல்லது சமூகப் பாதுகாப்புத் துறை முறையான கண்காணிப்பை உறுதி செய்ய வேண்டும்.

**வழக்கு விசாரணை:**

இத்தகைய வழக்குகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளை விசாரிப்பது மிக நுட்பமாக செய்யப்பட வேண்டும். விசாரணை, வழக்கமான போலீஸ் ஸ்டைலில் இருக்கக்கூடாது என்று உள்துறை செயலர், டி.ஜி.பி, எஸ்.பி. என்று பல மட்டங்களில் புகார் கொடுத்தும், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தும், பொதும்பு பிரச்னையில், விசாரணை அதிகாரியான பெண் இன்ஸ்பெக்டர், மழை வெளுத்துக் கட்டுகிற இரவில், மின்சாரம் இல்லாத இருட்டில், நடு ரோட்டில் நின்று கொண்டு, விசாரணைக்காக, குழந்தைகளை அழைத்த கொடுமை மதுரையில் நடந்தது. மாதர் சங்கம் தட்டிக் கேட்ட பின், விசாரணை அதிகாரி மாற்றப் பட்டார். கேரள மாநிலம் ஆலப்புழையில், பாலியல் பலாத்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட ஒரு சிறு குழந்தையை, குற்றவாளிக்கு எதிரில் ஒரு பொது இடத்தில் நிற்க வைத்துக் கொண்டு, ஒரு இன்ஸ்பெக்டர் கேள்வி கேட்டார்.

மாதர் சங்கம் தலையிட்ட வழக்குகளில் எல்லாம் இது குறித்த கோரிக்கைகள் வைக்கப் பட்டன. ஆனால், தற்போது, பாலியல் தாக்குதல்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (2012) நிறைவேற்றப் பட்டு விட்டது. இனி, குழந்தைகளைப் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாக்குபவர் மீது, இச்சட்டப் பிரிவுகள் பயன்படுத்தப்பட வேண்டும். இதன் படி, வன்முறை செய்தார் எனப் பிராசிகியூஷன் தரப்பில் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. வன்முறை செய்யவில்லை என்று குற்றவாளி தான் நிரூபிக்க வேண்டும். குழந்தைகளை விசாரிக்கும் போது காவலர்கள் சீருடை அணியாமல் இருக்க வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு தனியறையில் விசாரிக்கப் பட வேண்டும். ஆனால், இவ்வாறான பல நல்ல பிரிவுகளுடன் கூடிய சட்டம் வந்திருப்பதே காவல்துறைக்குப் பரவலாகத் தெரியாதாம்! என்ன கொடும சார் இது!

### செய்ய வேண்டியது என்ன?

பள்ளிகளில் புகார் பெட்டி வைக்கப்பட வேண்டும். மன நல ஆலோசகர் நியமனம் அனைத்துப் பள்ளிகளிலும் கட்டாயமாக்கப் பட வேண்டும். பள்ளியில் பாலியல் துன்புறுத்தல் நடப்பதாகப் புகார் வந்தால், பள்ளி நிர்வாகம் அல்லது மாவட்டக் கல்வித்துறை அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் பதிவுசெய்ய வேண்டும். செய்யத் தவறினால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். தேசிய அளவில் குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் சட்ட அந்தஸ்துடன் செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் இத்தகைய ஆணையங்கள் அமைக்கப் பட வேண்டும் என்று பல முறை, தேசிய ஆணைய தலைவர் சாந்தா சின்ஹா அவர்கள் மாநில முதல்வர்களுக்கும், யூனியன் பிரதேச முதல்வர்களுக்கும் கடிதம் எழுதியும், பல மாநிலங்களில் இன்னும் அமைக்கப் படவில்லை. அதில் தமிழகமும் ஒன்று. புதிய சட்டங்கள் வரும் போது, அவை குறித்த விவரங்கள் காவல் துறைக்கும், பொதுமக்களுக்கும், பிற பகுதியினருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். சில முக்கிய அம்சங்கள், காவல்நிலையத்தில் காட்சிப் படுத்தப்பட வேண்டும்.

பொதுவாகக் குழந்தைகளுக்குத் தொடுதல் நல்லதா கெட்டதா என்று தெரிந்து கொள்ள பழக்கப் படுத்த வேண்டும். கெட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்துடன் யாராவது தொட்டால், உடனே அந்த இடத்திலிருந்து ஓடி விட வேண்டும். அல்லது சத்தம் போட வேண்டும் என்று சொல்லித் தர வேண்டும். ஒன்றுமே தெரியாத குழந்தைகளுக்கு நாம் ஏன் இதையெல்லாம் சொல்லி கொடுக்க வேண்டும் என்று சிலர் நினைக்கலாம். நாம் சரியாக சொல்லிக் கொடுக்கா விட்டால், தவறுகள் நடக்கும் போது அவர்களால் புரிந்து கொள்ள முடியாது.

**சமூக விரோதிகளும், இதர கொடுமையாளர்களும்:**

சமூக விரோதிகளால் குழந்தைகள் பாதிக்கப் படுவதும் அன்றாட செய்தியாகிக் கொண்டிருக்கிறது. 7ம் வகுப்பு மாணவி தூத்துக்குடி புனிதா வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு, ஸ்கூல் பேக் அருகில் கிடக்க, கொலை செய்யப்பட்டுக் கிடக்கும் காட்சி எவரையும் கலங்கவைக்கும். நாகை மாவட்டம் தலைஞாயிறு பகுதியில் நான்காம் வகுப்பு மாணவி, இரண்டு மைனர் சிறுவர்களால் வீடு புகுந்து தூக்கிவரப்பட்டு பலாத்காரம் செய்யப் பட்டிருக்கிறாள். சிவகாசியில் இரவு 7 மணி அளவில், சைக்கிளில் சென்று கொண்டிருந்த சிறுமி, 3 இளைஞர்களால் வழிமறித்து வன்புணர்ச்சி செய்யப்பட்டாள். கதறி அழுது கொண்டே, தள்ளாடியவாறு சென்ற அவளைப் பற்றிய செய்தியை உடனே தன் நண்பர்களுக்குப் போன் செய்து சொல்ல, அவர்களும் அங்கு வந்து, அந்தச் சிறுமியை இன்னொரு இடத்துக்கு இழுத்துச் சென்று வன்புணர்ச்சி செய்துள்ளனர். இவர்களையெல்லாம் மனிதர்கள் என்று சொல்ல முடியுமா? இந்த மண்ணில் வாழ இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?

பல வருடங்களுக்கு முன் என்றாலும், கீழே கூறப்பட்டுள்ள சம்பவத்தை மறக்க முடியாது. விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் சுபலட்சுமி என்கிற 13 வயது சிறுமி, டியூஷன் போகும் வழியில் 3 கயவர்களால் பலாத்காரம் செய்யப் பட்டு, அவளது துப்பட்டாவைக் கொண்டே கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு, கிணற்றில் வீசப்பட்டாள். மகளைக் காணவில்லை என்று பதட்டத்தோடு காவல் நிலையம் சென்றால், புகைப்படம் கேட்டிருக்கிறார்கள். அவசரத்தில், அச்சிறுமி பள்ளி நாடகத்தில் நடித்த போது எடுத்த புகைப்படத்தைக் கொண்டு வந்தனர். உடனே, ஆய்வாளர், இவ்வளோ மேக்அப் போட்டிருக்கே, எவனோடயாவது ஓடித்தான் போயிருக்கும் என்றார். கடைசியில், கழுத்து நெரிபட்டு, கண்விழி பிதுங்கி, நாக்கு வெளியே தள்ளி, உடல் தண்ணீரில் ஊறிப் போய், நடுங்க வைக்கும் தோற்றத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் அழகு மகளின் பிணத்தைப் பார்த்த பெற்றோரை, சாகும் வரை ஆறுதல் படுத்த முடியுமா? அந்தப் புகைப்படத்தைப் பார்த்தே பல நாட்கள் நமக்கு சோறு தண்ணி இறங்கவில்லை. மாதர் சங்க சார்பில் விடாப்பிடியான போராட்டம் நடத்தப் பட்டு, பிறகு தான் 3வது குற்றவாளியைக் கைது செய்தனர். ஒவ்வொரு முறையும் குற்றவாளிகள் ஜாமீனுக்கும், வாய்தாவுக்கும் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட போதெல்லாம், மொத்தம் 11 முறை மாதர் சங்க ஆர்ப்பாட்டம் அங்கே நடந்தது. இறுதியில் செஷன்ஸ் கோர்ட் தூக்கு தண்டனை விதித்தது. பின்னர், உயர்நீதிமன்றம், ஆயுள் தண்டனையாக அதைக் குறைத்தது.

அக்கம் பக்கத்தினர் செய்கிற அநியாயங்களும் நிறையவே உண்டு. மிட்டாய் தருவதாக அழைத்துச் சென்று பலாத்காரம் செய்து விட்டு, வெளியே சொன்னால் கொன்று விடுவதாக, அல்லது குழந்தையின் அம்மாவைத் தாக்குவதாக மிரட்டுகிற சம்பவங்களைப் பார்த்திருக்கிறோம். இதில் படித்தவர் படிக்காதவர் என்ற வித்தியாசமே இல்லை. கோவையில், ஒரு பொறியாளர் இந்தக் குற்றத்தைச் செய்தார். மாதர் சங்கம் பிரச்னை செய்த பிறகே காவல் துறை தலையிட்டது. இறுதியில், குற்றவாளிக்குத் தண்டனை கிடைத்தது. இதில் ரத்தத்தோடு கதறிக் கொண்டிருந்த குழந்தையை, அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்த போது, ஒரு ஊசி மட்டும் போட்டு விட்டு, பணம் கட்டாததால் சிகிச்சை அளிக்க மறுத்திருக்கின்றனர். பிறகு அரசு மருத்துவமனைக்கு மாற்ற வேண்டியிருந்தது. தனியார் மருத்துவமனைகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும், அவசர சிகிச்சைக்குக் காவல்துறையின் உத்தரவு வேண்டும், பணம் வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது என்பது தான் இத்தகைய சம்பவங்களிலிருந்து உருவாகும் கோரிக்கை.

**மதச் சாயம் பூச வேண்டாம்:**

மத வித்தியாசமும் இக்குற்றத்துக்கு இல்லை. எல்லா மத சாமியார்களிலும் சிலர் குற்றம் செய்த செய்திகளைப் பார்த்திருக்கிறோம். கோவையில் ஒரு மத போதகர், அவர் மனைவி ஒரு ஆசிரியர். குழந்தை இல்லை. பக்கத்து வீட்டு 13 வயது பெண்ணிடம் பாசத்துடன் பழகினர். பெற்றோரும், இயல்பாக அதை எடுத்துக் கொண்டனர். கடைசியில் பார்த்தால், மத போதகர், அடிக்கடி அந்தச் சிறுமிக்கு ஜூசில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து உடலுறவுக்குப் பயன்படுத்தினார். சிறுமி கர்ப்பமாகி, விஷயம் வெளியே தெரிய வந்த போது, தாமதமானதால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்கலைப்பு செய்ய முடியவில்லை. 14 வயதில், இரட்டை குழந்தைகளுக்கு அச்சிறுமி தாயான கொடுமை மறக்கவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது.

பிரேமானந்தா சாமியாரின் குற்றங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியதில் பிரதான பங்கு ஜனநாயக மாதர் சங்கத்துக்குத் தான் என்பதை மறுக்க முடியாது. 1990களில் ஒரு தீபாவளியன்று இரண்டு பெண்கள் தேடி வந்தனர். ஆசிரமக் கொடுமைகளை விவரித்தனர். பத்திரிகையாளர் ரஷீதா பகத் இரண்டு பகுதி கட்டுரைகளாக, இந்தியன் எக்ஸ்பிரஸில் அதை எழுதினார். மாதர் சங்க அன்றைய பொது செயலாளர் பாப்பா உமாநாத், புதுக்கோட்டை எஸ்.பி. ஜே.கே.திரிபாதிக்குத் தந்தி அனுப்பினார். இது தான், பிரேமானந்தாவின் கைதுக்கு இட்டுச் சென்றது. அவருடைய சர்வ தேச சிஷ்யகோடிகள் சிலர், மாதர் சங்கத்தைத் திட்டிக் கடிதம் எழுதினர். பாதுகாப்பிற்காக பாதிக்கப் பட்ட பெண்கள் வைக்கப் பட்ட அமைப்பின் நிறுவனருக்கு மிரட்டல்கள் வந்தன. பிறகு, மாநிலம் தழுவிய பிரச்னையாக இது மாறியது. சிபி சிஐடி பிரிவு வழக்கை நடத்தியது. இறுதியில் இரட்டை ஆயுள் தண்டனை அவருக்கு அளிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் வரை அவரும் சென்று பார்த்தார். ஒன்றும் நடக்கவில்லை. மாதர் சங்கத்தை திட்டிக் கொண்டே, சிறையிலேயே இறந்து போனார்.

குற்றவாளி ஒரு குறிப்பிட்ட மதம் என்றால் பிரச்னையாக்குவது அல்லது எதிர் தரப்பு, அவரைப் பாதுகாக்க களத்தில் இறங்குவது என்பன போன்ற போக்குகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சாதி மதம் பார்த்துத் தலையிடுபவர்கள், குறுகிய கண்ணோட்டத்துடன் செயல்படுகிறார்கள் என்பது அம்பலப்படுத்தப் பட வேண்டும்.

**பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள்:**

பெண்கள் மீதான பாலியல் வன்முறை அதிர்ச்சி அளிக்கக் கூடிய விதத்தில் பெருகி வருகிறது. இந்தியாவில், 40 நிமிடங்களுக்கு ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் படுகிறாள். 27 நிமிடங்களுக்கு ஒரு முறை பாலியல் சீண்டல் அல்லது துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் படுகிறாள். குடும்ப உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், தெரிந்தவர்கள், நண்பர்கள், சமூக விரோதிகள், கொள்ளையடிக்க வருபவர்கள் என்று குற்றமிழைப்பவர்கள் குறித்த ஒரு பட்டியலே போடலாம்.

பாலியல் சீண்டல் ஒரு குற்றம் என்பது உள்வாங்கப்படாமல், பெரும்பாலும் ஒரு லேசான விஷயமாகவே சமூகத்தால் பார்க்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. ஈவ் டீசிங் என்கிற வார்த்தையே, இக்குற்றத்தின் உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காட்டுகிறது என்பது பெண்கள் அமைப்புகளின் குற்றச்சாட்டு. பாலியல் சீண்டல் குறித்து அண்மையில் வெளிவந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, அரசியல் சட்டம் உறுதி செய்துள்ள உரிமையைப் பறிப்பதாகவே பாலியல் சீண்டல் அமைகிறது என்று சுட்டிக் காட்டுகிறது. அரசியல் சட்டத்தின் பிரிவு 21, அனைத்துக் குடிமக்களுக்கும் கண்ணியத்துடன் வாழும் உரிமையை அளிக்கிறது. பாலியல் சீண்டல் பெண்கள் கண்ணியமாக நடமாடுவதைத் தடுக்கிறது. சமத்துவத்தை உறுதி செய்கிற பிரிவுகள் 14, 15க்கும் கூட இச்செயல் எதிரானது. எனவே, இக்குற்றம், அரசியல் சட்டத்துக்கே விடப்படும் சவாலாகப் பார்க்கப்பட வேண்டும் என்பது தான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம். பெருமளவில் பெண்கள் கல்வி நிலையங்களுக்கும், வேலை தலங்களுக்கும் போகிற சூழலில், அவர்களது பாதுகாப்பு என்பது, பண்பாடு, நாகரீகம் மிக்க ஒரு சமூகத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கொடுமை கொடுமைன்னு கோயிலுக்கு போனா, அங்க ரெண்டு கொடும ஜங்கு ஜங்குன்னு ஆடிக்கிட்டு வந்துச்சாம் என்று சொல்லுவார்கள். அதைப் போல், பாலியல் குற்றங்களில் நீதி வழங்க வேண்டிய காவல்துறையினரும், அரசு அதிகாரிகளும், அமைச்சர்களும், மக்கள் பிரதிநிதிகளும் குற்றவாளி பட்டியலில் இருக்கின்றனர். தர்மபுரியில் ஒரு மாஜிஸ்டிரேட், ஒரு வழக்கிற்கு வந்த வாதியின் வீடு தேடிப் போய் பாலியல் தொந்தரவு செய்தார். ஊர் மக்கள் விரட்டியடித்தனர். ஓரிசாவில் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்காக வாதாடிய அட்வகேட் ஜெனரலே, அயோக்கியத்தனமான வேலையில் இறங்கினார். தளி கல்பனா சுமதி, சிதம்பரம் பத்மினி, வாச்சாத்தி, சின்னாம்பதி மலை வாழ் பெண்கள், நாங்குநேரி சுப்புலட்சுமி, ராமேஸ்வரம் ராக்கம்மாள், முருகலட்சுமி, ஆலங்குளம் உமா, திருக்கோவிலூர் இருளர் பெண்கள், தேனி மாவட்டம் வசந்தி என்று அன்றிலிருந்து இன்று வரை பல கொடுமையான சம்பவங்களைக் காவல்துறையின் அத்துமீறலுக்கு உதாரணமாகக் கூற முடியும்.

இத்தகைய சம்பவங்கள் வெளியே வருவதே பெரிது. அப்படி வெளியே வந்தவுடன், காவல்துறை தரப்பில் முதலில் சொல்லப் படும் விஷயம், சம்பந்தப்பட்ட பெண் நடத்தை கெட்டவர் என்பது தான். 1970களில் மதுரா வழக்கிலும், இது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்டது. நடத்தை எப்படி இருந்தாலும், பெண்ணின் சம்மதமில்லாமல் நடப்பது குற்றம் தானே என்ற கேள்வி மாதர் இயக்கத்தால் எழுப்பப் பட்ட போது, அதற்கு ஏற்புத் தன்மை கிடைப்பதற்குப் பல காலம் ஆனது.

**மதுராவுக்குக் கிடைத்த மனு நீதி:**

பல விதங்களில் மதுராவின் வழக்கு முக்கியமான ஒன்று. மஹாராஷ்டிரா மாநிலத்தில் மதுரா என்ற 16 வயது ஆதிவாசி சிறுமி, ஒரு பிரச்னைக்காக, உறவினருடன் விசாரணைக்குக் காவல் நிலையத்துக்கு அழைத்து வரப் பட்டு, காவல் நிலைய கழிப்பறையில் இரண்டு காவலர்களால் வன்புணர்ச்சி செய்யப்பட்டார். வழக்கு நீதிமன்றத்துக்குப் போன போது, செஷன்ஸ் நீதிமன்றம், மதுராவுக்கு ஏற்கனவே காதலன் இருந்ததால், பாலியல் உறவுக்கு அவர் பழக்கப் பட்டிருப்பார், எனவே நடந்தது வன்புணர்ச்சி அல்ல என்று, குற்றவாளிகளை விடுவித்தது. உயர்நீதிமன்றம், அதை மறுத்து, காவலர்களுக்கு 6 வருட தண்டனை வழங்கியது. 1979ல் உச்ச நீதிமன்றத்துக்கு வழக்கு போன போது, வழக்கில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர். சொல்லப்பட்ட காரணம் என்ன தெரியுமா? மதுராவின் உடலில் காயங்களே இல்லை, எனவே அவர் எதிர்த்துப் போராடவில்லை, அவர் சம்மதத்துடன் தான் சம்பவம் நடந்திருக்கிறது என்பது தான். சம்மதம் என்பது உடல் காயங்களை வைத்துத் தான் நிர்ணயிக்கப்படுவதா? அப்படியானால், அச்சுறுத்தப்பட்டு எதிர்ப்பு தெரிவிக்கவே வழி இல்லாதவர்களின் கதி என்ன? சம்மதம் இருந்தாலும், பணியில் இருந்த காவலர்கள், காவல்நிலையத்திலேயே இந்த அக்கிரமத்தில் ஈடுபடுவதை நீதிமன்றம் அங்கீகரிக்கிறதா? வெடித்துக் கிளம்பியது நாடு தழுவிய எதிர்ப்பு. அப்போது இந்த அளவுக்கு ஊடகங்கள் இல்லை, இருந்தவையும் பெரிய அளவு இப்போராட்டத்தை வெளிக் கொண்டு வரவில்லை. ஆனாலும், பெண்கள் அமைப்புகள் மனம் தளராமல் போராடினர். தமிழகத்தில், மாதர் சங்கம், "மதுராவுக்குக் கிடைத்த மனுநீதி" என்ற பிரசுரத்தை வெளியிட்டு, மீண்டும் வழக்கு மறு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தது. இப்போராட்டத்தின் விளைவாக, 1983ல் மத்திய அரசு, கிரிமினல் சட்டங்களில் பல திருத்தங்களைக் கொண்டு வர நேர்ந்தது. விருப்பத்துக்கு விரோதமாக என்பதும், சம்மதம் இன்றி என்பதும் இரண்டுமே தவறு என்ற நிலை உருவாக்கப்பட்டது. பாதுகாவலில் பலாத்காரம் என்றால் 7 வருடங்களுக்குக் குறையாமல் சிறை தண்டனை வழங்க வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப் பட்டவரின் அடையாளம் வெளிப்படுத்தப்படக்கூடாது போன்ற அம்சங்கள் சட்டத்தில் இணைக்கப்பட்டன. பெண்கள் அமைப்புகளின் தொடர் போராட்டத்தால், 2000த்தில், சட்டக் கமிஷன் தனது 172வது அறிக்கையில்,

- வன்புணர்ச்சி சம்பவங்களைப் பாலியல் தாக்குதல் குற்றங்களாகக் கருத வேண்டும்.
- பாதிக்கப்பட்டவரின் கடந்த கால நடத்தை கேள்விக்குள்ளாக்கப் படக் கூடாது.
- பாதுகாவலில் பலாத்கார வழக்குகளில் குற்றம் செய்யப்பட்டது என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும் என்பது மாறி, குற்றம் செய்யவில்லை என்பதைக் குற்றவாளி நிரூபிக்க வேண்டும்.
- 16 வயதுக்கு உட்பட்ட பெண்கள் சம்மதித்தாலும், அது சம்மதமாக எடுத்துக் கொள்ளப் படக் கூடாது.
- பெண் காவலர் தான் விசாரிக்க வேண்டும்
- தன்னார்வ அமைப்பு பிரதிநிதிகள் யாராவது உடன் இருக்க வேண்டும்

என்ற திருத்தங்களைப் பரிந்துரைத்து அவை ஏற்றுக் கொள்ளப் பட்டன.

18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சம்மதம் கொடுத்தார்களா இல்லையா என்பதைப் பொறுத்தே, நடந்தது விருப்ப அடிப்படையில் நிகழ்ந்த உறவா அல்லது வன்புணர்வா என்ற முடிவுக்குப் போக முடியும். அது ஒரு மெல்லிய கோடு தான். இதிலெல்லாம், மௌனம் சம்மதம் என்று எடுத்துக் கொள்ள முடியுமா? எனவே, பெண்கள் அமைப்புகள், சம்மதம் என்பது, தெளிவாகப் பெண்ணால் சொல்லப் பட்டிருக்க வேண்டும் என்று வரைறை செய்ய வற்புறுத்துகின்றன. சில நிகழ்வுகளில், திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்து, பெண் அதை நம்பிய நிலையில் பாலியல் உறவு நடந்திருக்கும். ஆனால், அதன் பின், ஆள் காணாமல் போய் விடுவார். இது குறித்த பல சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள், பொய்யான வாக்குறுதியின் அடிப்படையில் பெறப்பட்ட சம்மதம், சம்மதமாகக் கருதப் படக் கூடாது, அப்படியென்றால், நடந்தது பாலியல் வல்லுறவு என்றே முடிவுக்குப் போக வேண்டியிருக்கும் என்று கூறியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவமனையில் . . . .**

மருத்துவமனையில் நோயாளிகளாக சேர்பவர்கள், அல்லது நோயாளிக்கு உதவி செய்வதற்காகத் தங்கும் உறவினர்களில் சிலர் கூட, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் படுகிறார்கள். மருத்துவமனை ஊழியர்கள் சிலர் இக்கொடுமைகளில் ஈடுபடுகின்றனர்.

**பாதிக்கப் பட்டவர்களின் மனப்போராட்டம்:**

பல வருடங்களுக்கு முன், சென்னையில் ஊனமுற்றோர் நலத் துறை ஆணையர், அத்துறையில் பணி செய்யும் ஒரு பெண் ஆசிரியரை வன்புணர்ச்சி செய்தார் என்று பாதிக்கப்பட்ட பெண் ஒரு புகார் கொடுத்தார். அதன் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் காவல் துறை முன் வரவில்லை. பிறப்புறுப்பைச் சுற்றியும் காயத்துடன் வந்த அவரை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மறு நாள், அவரைப் பார்க்கச் சென்றால், காவல்துறை விடவில்லை. மருத்துவமனை அதிகாரிகளும் அனுமதிக்கவில்லை. அவர் என்ன குற்றவாளியா, கைது செய்து வைத்திருக்கிறீர்களா, எங்களைப் பார்க்க அவர்தான் அனுமதிக்க வேண்டுமே தவிர, உங்கள் அனுமதி தேவையில்லை என்று பெரிய வாக்குவாதம் செய்ய வேண்டி வந்தது. அவர் வெளியே வந்த பிறகு, ஒரு பத்திரிகையாளர் கூட்டம், மாதர் சங்க அலுவலகத்தில் நடத்தப்பட்டது. அதில் சில பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளை சகித்துக் கொள்ளவே முடியவில்லை. மாதர் சங்கத் தலைவர் மைதிலி சிவராமன், குறுக்கிட்டு, இது என்ன நீதிமன்றமா, நீங்கள் இப்பெண்ணைக் குறுக்கு விசாரணை செய்கிறீர்களா என்று சத்தம் போட்ட பிறகு தான் நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. வழக்கை சிபி சிஐடி விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, சென்னை விருந்தினர் மாளிகைக்கு அருகே, எழுச்சியான ஆர்ப்பாட்டம், பாப்பா உமாநாத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. காவல் துறையுடன் பலத்த தள்ளுமுள்ளும் ஏற்பட்டது. மறு நாளே, முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், சிபிசிஐடிக்கு வழக்கை மாற்றினார். ஆனால், குற்றவாளி, அந்தப் பெண்ணின் கணவரை சந்தித்துப் "பேசி", வழக்கை வாபஸ் வாங்க வைத்து விட்டார். இதுக்கா இவ்வளவு கஷ்டப்பட்டோம் என்று ஆதங்கப்பட்டவர்களும் உண்டு. ஆனால், விஷயத்தை அப்படிப் பார்க்க முடியாது. பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை, குடும்ப நிர்ப்பந்தம், சமூகம் இவர்களைப் பார்க்கிற பார்வை போன்றவற்றையும் கணக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தால், அவர்களின் மனப் போராட்டத்தை, சில சமயம் எடுக்கிற இத்தகைய முடிவுகளைப் புரிந்து கொள்ள முடியும். நாம் உதவி செய்பவர்கள் என்ற நிலையில் இல்லாமல், அவர்களது நிலையில் நின்று உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான், தேவையான ஆற்றுப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

**போராட்டப் பாதை:**

இறுதி தீர்ப்பு வருவதற்கு ஆகும் கால தாமதம், பாதிக்கப் பட்டவர்கள் பாதியிலேயே விலகிக் கொள்வதற்கு ஒரு முக்கிய காரணம். அமைப்புகள் துணை நிற்கும் சூழலில், நீதிக்கான போராட்டம் வெற்றி பெற வாய்ப்புகள் அதிகம். வாச்சாத்தி ஆதிவாசி பெண்கள் மீது வனத்துறை, வருவாய் துறை, காவல் துறையின் ஆதிக்கச் சங்கிலிகளும், அட்டகாச பாலியல் நடவடிக்கைகளும் மறையா வடுவாக ஆழப் பதிந்து கிடந்தன. ஒன்றா, இரண்டா, 19 ஆண்டு போராட்டம்; ஒவ்வொரு பெண்ணும் வீராங்கனையாக, போராளியாக உருவெடுத்தனர். மார்க்சிஸ்ட் கட்சியை, மலை வாழ் மக்கள் சங்கத்தை, ஜனநாயக மாதர் சங்கத்தை இறுகப் பற்றி நின்றனர். இது செங்கொடியின் வெற்றி என்று பறை சாற்றினர். பத்மினியின் போராட்டக் குரலும், சின்னாம்பதி ஆதிவாசிப் பெண்களின் போர் பறையும், இவை போன்ற இயக்கங்களால் உரத்து ஒலித்தன. வலுத்து எழும்பின. இந்த ஏழை பெண்களைப் பொய்யர்கள் என்றும், இயக்கங்கள் அரசியல் ஆதாயம் தேடுகின்றன என்றும் ஆள்வோர் குற்றம் சாட்டினார்கள். ஆனால், வரலாறு காட்டியது யார் பொய்யர்கள் என்று, யார் ஆதிக்க அரசியலையும், வாக்கு வங்கி அரசியலையும் நடத்தினார்கள் என்று.

பாதிக்கப்பட்டவர்களின் சாதி மற்றும் பொருளாதார பின்னணி குறித்த ஆய்வு விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், மாதர் சங்கம் தலையிட்ட பிரச்னைகளிலிருந்தும், பிரசுரிக்கப் படும் செய்திகளிலிருந்தும் பார்க்கும் போது, ஏழை பெண்களும், தலித் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களும் தான் கூடுதலாக பாலியல் வன்முறைக்கு இலக்காகிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. காவல் நிலையக் குற்றங்களில் பாதிக்கப் பட்டவராக பொதுவாக, சாதியில், பொருளாதாரத்தில் உயர்த்தப் பட்ட பெண்ணைப் பார்க்க முடியாது. வன்முறை ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்ற பின்னணியில், சாதியும், வர்க்கமும் பாலியல் தாக்குதலுக்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீளும் விரல்கள் யாரை நோக்கி?**

வன்முறையும், வக்கிரமும் வளர்ச்சிப் பாதையிலே இருக்கும் ஒரு சமூகத்தில், எளியோருக்கு பாதுகாப்பு எங்கே இருக்க முடியும்? பெண்ணின் உடலைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் தான் ஆண்மை இருக்கிறது என்று போதிக்கப் படுகிறது. குடி போதை அதை நடத்திக் காட்டும் துணிச்சலைக் கொடுக்கிறது. ஆணாதிக்க சமூகத்தில், தவறு செய்த ஆணைக் குற்றம் சாட்டுவதற்கு பதிலாக, பாதிக்கப்பட்ட பெண்ணையே பலிகடாவாக்கும் வாதங்கள் முன்வருகின்றன.

பெண்ணின் திருமண வயதைக் குறைக்க வேண்டும் என்று வட மாநில சாதி பஞ்சாயத்துக்கள் கோருவதற்கும், அதிகரிக்க வேண்டுமென்று திரு ராம்தாஸ் சொல்வதற்கும் பின்னால், தவறுகளுக்குக் காரணம் பெண் தான் என்கிற அபத்தம் தெளிவாகத் தெரிகிறது. இரவு நேரத்தில் பெண் தனியாக வரலாமா, குறைவான பயணிகள் இருக்கும் பேருந்தில் சில ஜோடிகள் கொஞ்சிப் பேசி சிரிக்கலாமா என்பன போன்ற தினமணியின் வாதங்களும் பெண்ணையே விரல் நீட்டிக் குற்றம் சாட்டுகின்றன. நடக்கிற கொடும் குற்றங்களுக்கு உரிமம் வழங்குகின்றன. குர்காவ் காவல் நிலைய ஆய்வாளர், பெண்கள் 6 மணிக்கு மேல் வேலை பார்க்கக் கூடாது என்று சுற்றறிக்கை விட்டார். இப்படியே போனால், சீதையின் நடவடிக்கை தான் ராவணனை ஊக்குவித்தது என்று கூட வாதாடுவார்கள் போலிருக்கிறது. மதுரா வழக்கிலிருந்து, பத்மினி வழக்கு வரை வாய் ஓயாமல் இதையே எத்தனை தடவை சொல்லுவார்கள்? எல்லோருக்கும் இருக்கும் சுதந்திரம் பெண்ணுக்கும் மட்டும் ஏன் மறுக்கப் பட வேண்டும்? சுதந்திர நாட்டில், பெண்களுக்கு மட்டும் ஊரடங்கு உத்தரவா?

ஆசாராம் என்ற துறவி, டெல்லி சம்பவத்தில், அப்பெண், சரஸ்வதி மந்திரத்தை உச்சாடனம் செய்திருக்க வேண்டும், அல்லது, சகோதரனே என்னை விட்டு விடு என்று அவர்கள் காலில் விழுந்து கெஞ்சியிருக்க வேண்டும், அப்படி செய்திருந்தால் தப்பித்திருக்கலாம் என்று ஒரே போடாகப் போட்டார். விளம்பரம் தேடுவதற்கான பிதற்றல் தான் இது.

**உடை குறித்த மாயை:**

அடுத்து, பெண்ணின் உடை தான், அவள் மீதான வன்முறைக்குப் பிரதான காரணம் என்ற பிரமை உருவாக்கப்படுகிறது. அதாவது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை என்பது பெண்ணே விரும்பி ஏற்படுத்திக் கொள்வது என்று பொருள். கர்நாடக மாநில டிஜிபி, பெண் அணியும் உடை தான் ஆண்களைப் பாலியல் ரீதியாகத் தூண்டுகிறது என்றார். மேற்கு வங்கத்தில், திரிணமூல் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஒருவர், பெண்ணின் ஸ்கர்ட் ஏற, ஏற வன்முறை உயருகிறது என்று திருவாய் மலர்ந்தார். அவ்வளவு ஏன், தேசிய மகளிர் ஆணைய தலைவர், பெண்கள் மேற்கத்திய பாணியில் உடை உடுத்துவது தான் வன்முறைக்குக் காரணம் என்றார். சத்தீஸ்கர் மாநில பெண்கள் ஆணைய தலைவர், பெண்கள் தங்கள் உடலைக் காட்டுவது தான், வன்முறைக்குக் காரணம் என்றார். சென்னை அண்ணா பல்கலை துணை வேந்தர் இத்தகைய காரணம் சொல்லித் தான், உடை கட்டுப்பாட்டை அறிமுகம் செய்தார். புதுச்சேரி அரசு, மாணவிகளுக்கு ஓவர் கோட்டும், தனிப் பள்ளி பேருந்தும் பரிந்துரைத்துள்ளது. மதுரை ஆதீனம், பெண்கள் உடலை மறைக்கும் உடை அணிய வேண்டும் என உபதேசம் செய்தார். ஆர்.எஸ்.எஸ். தலைவர், நகர்ப்புற இந்தியாவில் மேற்கத்திய கலாச்சாரம் காரணமாக வன்முறை நடக்கிறது. கிராமப்புறத்தில் இப்படி நடப்பதில்லை என்று இந்துத்வக் கருத்தைப் பதிவு செய்தார். கிராமப்புறத்தில் என்ன நடக்கிறது என்று தெரியாதவர்களெல்லாம், ஒரு அமைப்பின் தலைவராக இருக்க முடியும் என்றால், அந்த அமைப்பின் செயல்பாட்டையே அலசிப் பார்க்க வேண்டுமல்லவா?

சிறுமியர் முதல் முதியவர் வரை பாலியல் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள் என்னும் போது, உடை பாலுணர்வைத் தூண்டுவதால் தான் வன்முறை நடக்கிறது என்ற வாதம் வெளுத்துப் போய் விடுகிறது. பொதும்பு பள்ளி மாணவிகள் பள்ளிச் சீருடை தான் அணிந்திருந்தார்கள். சரிகா ஷா சுடிதார் போட்டிருந்தார். மாதர் சங்கம் எடுத்து நடத்திய எண்ணற்ற வழக்குகளில், பாதிக்கப்பட்ட பெண்கள் புடவையும், சுடிதாரும் தானே அணிந்திருந்தனர்? வாச்சாத்தி, சின்னாம்பதியின் ஏழை மலை வாழ் பெண்கள் என்ன உடை அணிந்திருந்தார்கள்? ஒரு வேளை, பெண்ணின் உடை ஆபாசமாக இருந்தது என்றாலும் கூட, அது வன்முறை செய்வதற்கான லைசென்சா? இந்திய தண்டனை சட்டம் இதற்கு விலக்கு அளிக்கிறதா? சரி, என்ன உடுத்தினால், எந்த இடத்தில் இருந்தால் வன்முறையிலிருந்து தப்ப முடியும் என்று சொல்லுவார்களா ? அப்படி ஒரு உடை உண்டா, இடம் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர்பு எல்லைக்கு வெளியே:**

அடுத்து, இளம் பெண்கள் செல் போன் வைத்துக் கொள்வதால், வன்முறை நடக்கிறது என்று ஆரம்பித்து விட்டார்கள். ஹரியானா, பீகாரில் உள்ள உயர் சாதி பஞ்சாயத்துக்கள், பெண்ணுக்கு செல் போன் கொடுக்கக் கூடாது என்று உத்தரவிடுகின்றனர். ராஜஸ்தானில் ஒரு முஸ்லீம் பஞ்சாயத்து இதே போன்ற உத்தரவை வெளியிட்டிருக்கிறது. பெண்கள், மற்றவர்களுடன் ஏன் பேச வேண்டும் என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறது. சமீபத்தில், உ.பி. மாநில பகுஜன் சமாஜ் கட்சி எம்.எல்.ஏ.வும் இதையே கூறியிருக்கிறார். சாதி பஞ்சாயத்துக்கள் ஒரு படி மேலே போய், 40 வயதுக்குக் குறைவான பெண்கள், மாலை 6 மணிக்கு மேல் வெளியே போகக் கூடாது என்றும், பெண்ணின் திருமண வயதை 16ஆகக் குறைக்க வேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர். காஞ்சி சங்கராச்சாரியார், வேலைக்குப் போகும் பெண்களில் 90% ஒழுக்கம் கெட்டவர்கள் என்றார். குற்றவாளிகள் குறித்து இவர்கள் வாய் திறப்பதில்லை. பாதிக்கப்பட்ட பெண் மீதே பழி போடுவது என்பது என்ன நியாயம்? பெண்கள் பெருமளவு பொது வெளியில் வரும் சூழலில், பொது வெளியைப் பாதுகாப்பானதாக எப்படி மாற்றுவது என்று யோசிக்க வேண்டும். பெண்களை அத்தகைய பொது வெளியிலிருந்தே அகற்றுவதற்கு நாள் குறிப்பது முட்டாள்தனம் மட்டுமல்ல, நிலைமையைத் தலைகீழாகப் பார்ப்பதாகும்.

சந்திரமுகி படத்தில் ரஜினியின் கண்டிக்கத் தக்க ஒரு வசனம் வரும் "குடும்பப் பெண்ணுன்னா, ராத்திரி 12 மணிக்கு வீட்ல தான் இருப்பாங்க" என்று. அதாவது, நள்ளிரவில் வீட்டில் இல்லாத பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்கள் என்பது தான் அதன் அர்த்தம். இது உண்மையா? பொது வாழ்வில், அரசியலில் இருக்கும் பெண்கள் பொதுக் கூட்டம், இயக்கப் பணிகள் முடித்து வீடு திரும்ப தாமதம் தான் ஆகும். அயலூருக்கு அல்லது நகரத்துக்குப் போய் வேலை பார்த்து விட்டு, சிறு வியாபாரம் செய்து விட்டு, அலுத்துக் களைத்து, கடைசி பேருந்தைப் பிடித்து ஊர் திரும்ப இரவில் 11ம் ஆகும், 12ம் ஆகும். அவசியம் காரணமாக உறவினர்களைப் பார்த்து விட்டு வீடு திரும்புவதற்குத் தாமதமாகலாம். அதெல்லாம் இல்லை, என் இஷ்டப் படி நண்பர்களுடன் படம் பார்த்து விட்டு வீடு திரும்புவேன் என்று முடிவெடுத்தும் தாமதமாக வரலாம். இவர்கள் எல்லாம் குடும்பப் பெண்கள் இல்லையா? அல்லது, வாருங்கள், எங்களைப் பாலியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாத்காரம் செய்யுங்கள் என்று இரு கரம் நீட்டி, வரவேற்பதாகப் பொருளா?

தவறு செய்பவர்களை நோக்கி விரல்கள் நீள வேண்டும். நடமாட்டமே இல்லாத இடங்களிலும், ஏன் இருட்டிலும் கூட, மனிதனாக இரு என்று வற்புறுத்த வேண்டும். கேடு கெட்ட பிறவியாக, ரத்தம் குடிக்கும் ஓநாயாக இருந்தால், நீ புறக்கணிக்கப் படுவாய் என்ற அச்சம் வர வேண்டும். தவறு செய்தால், அக்கம்பக்கம் இருப்பவர்கள் தட்டிக் கேட்பார்கள் என்ற நிலை இருக்க வேண்டும்.

**காவல் கண்காணிப்பு (policing) என்றால் என்ன?**

குற்றம் நடந்த பிறகு காவல் துறையின் நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும் என்று பொதுவாக வரையறுக்கப் பட்டிருக்கிறது. அதிலும் கூட, பாலியல் வன்புணர்ச்சியைப் பொறுத்த வரை காவல் துறை பின்பற்ற வேண்டிய அம்சங்கள் குறித்து ஒரு நிலையான விதிமுறை (standard operating procedure) உருவாக்கப்பட வேண்டும். அவற்றில் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது, 24 மணி நேரத்துக்குள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது, குற்றம் நடந்த போது அணிந்திருந்த ஆடைகளை சாட்சியமாகக் கைப்பற்றிப் பாதுகாப்பது, பாதிக்கப்பட்டவரின் சட்ட உரிமைகள் என்ன என்று விளக்கிச் சொல்வது போன்றவை அடங்கும்.

மேற்கு வங்க மாநிலத்தில், இடது முன்னணி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பிறகு, இளம் பெண்கள் மீதான வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. முதலமைச்சர் மம்தாவோ, "என் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க சிபிஎம் செய்யும் சதி" என்ற போர்வைக்குள் அனைத்தையும் மூடி மறைக்கிறார். ஜனநாயக மாதர் சங்க மனுவை ஏற்று அம்மாநிலத்துக்குச் சென்று பார்வையிட்ட தேசிய மகளிர் ஆணையமே, சமீப காலமாக அங்கு வன்முறை அதிகரித்திருக்கிறது, காவல்துறை மற்றும் நிர்வாகத்தின் தலையீடு சரியில்லை என்று அறிக்கை அளித்திருக்கிறது. சாதியால், மதத்தால், அரசியலால் என்று பல காரணங்களால் குற்றவாளியைப் பாதுகாக்க செய்யப்படும் எந்த முயற்சியையும் அனுமதிக்கக் கூடாது.

பாதிக்கப்பட்டவர் பல விதங்களில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் போது, குற்றவாளி சுதந்திரமாக உலவுவதும், தண்டனை கிடைக்காமல் விடுதலை ஆவதும், குறுகிய தண்டனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் முடிந்து விரைவில் வெளியே வந்து சுற்றிக் கொண்டிருப்பதும் எப்படி பொறுத்துக் கொள்ளப் பட முடியும்? பாலியல் வன்புணர்வு வழக்குகளில் சராசரியாக 26% வழக்குகளில் தான் தண்டனை கிடைக்கிறது. இது அதிகரிக்காமல், தவறு செய்பவர்களுக்கு ஒரு தார்மீக அச்சத்தை உருவாக்கமுடியாது. புகார் கொடுக்க முன் வரும் பெண்களுக்கு, நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்த முடியாது. காவல் துறை, அரசு தரப்பு வழக்கறிஞர்கள், நீதித் துறையின் பங்கு இதில் பிரதானமானது.

இது ஒரு புறம் இருக்க, சாதாரண காலத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த காவல்துறை என்ன செய்ய வேண்டும் என்பதும் முக்கியமானது. அரசுக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்குவது, பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பதில் தான் கூடுதல் நேரமும், சக்தியும் செலவழிக்கப் படுகிறது. பாலியல் குற்றங்கள் நடக்கும் இடங்களைப் பட்டியலிட்டு, அந்த இடங்களில் ரோந்து செல்வது உறுதி செய்யப்பட வேண்டும். சிசிடிவி கேமராக்கள் முக்கிய இடங்களில் பொருத்தப்பட வேண்டும். ஹெல்ப் லைன் தொலைபேசி எண்ணுக்கு அழைப்பு வந்தால், எடுக்காமல் இருப்பது அல்லது எடுக்க ஆள் இல்லாமல் இருப்பது, எடுத்தாலும், வேறு எண்ணைக் கொடுத்து அங்கு பேசச் சொல்வது, வேறு இடத்துக்கு அழைப்பை மாற்றுவது என்று இல்லாமல், எடுக்கும் நபர் அனைத்து விவரங்களையும் பெற்றுக் கொண்டு துரித நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வப்போது ரோந்து வாகனங்கள் மூலம், எச்சரிக்கை அறிவிப்புகள் பொது மக்களுக்கு விடப்பட வேண்டும்.

**தூக்கு தண்டனை:**

பாலியல் வன்புணர்வு குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றன. தமிழக முதல்வரின் 13 அம்ச திட்டத்திலும் இது இடம் பெறுகிறது. சகிக்க முடியாத கொடூரங்களைப் பார்க்கும் போது எழும் கோபமும், ஆதங்கமும், இயலாமையும், வெறுப்பும், விரக்தியும் இத்தகைய கோரிக்கையின் பின்னணியில் இருக்கின்றன. இந்தியாவைப் பொறுத்த வரை, அரிதிலும் அரிதான குற்றங்களில் தூக்கு தண்டனை வழங்கலாம் என்பது சட்டத்தில் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட வன்புணர்வு வழக்கு அரிதிலும் அரிதான வழக்கு என நீதிமன்றம் கருதினால், தூக்கு தண்டனை கொடுக்கட்டும், அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்புணர்வு குற்றம் என்றாலே, தூக்கு தண்டனை தான் என்று வந்தால், முதலில், பாதிக்கப்பட்ட பெண்ணைக் குற்றவாளி உயிரோடு விடவே மாட்டான். அவள் உயிருடன் இருந்தால் தானே சாட்சி சொல்ல முடியும்? அடுத்து, 3 ஆண்டு, 7 ஆண்டு என்று தண்டனை இருக்கும் போதே, 26.4 % வழக்குகள் தான் தண்டனைக்கு உள்ளாகின்றன. பல நூறு வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. தூக்கு தண்டனை என்று வந்து விட்டால், சந்தேகத்தின் பலன் கூடுதலாகக் குற்றவாளிக்கே கிடைக்கும். தண்டனை கொடுப்பது குறையும்.

- எனவே, இருக்கிற சட்டங்கள் முறையாக அமல் படுத்தப்பட வேண்டும். தவறுகிற காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- விரைவு நீதிமன்றங்கள் அமைத்து, 3 மாத காலத்தில் தீர்ப்பு அளிக்கப் பட வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள், அடையாளங்களை அவர்களது அனுமதியில்லாமல் வெளியிடக் கூடாது.
- நாடாளுமன்றத்தில் நிலுவையில் இருக்கிற பாலியல் தாக்குதலைத் தடுக்கும் சட்டம் நிறைவேற்றப் பட வேண்டும்.
- கும்பல் பலாத்காரம், பாதுகாவலில் பலாத்காரம் போன்ற குற்றங்களுக்கு, ஆயுள் முழுதும் சிறையில் இருக்கிற ஆயுள் தண்டனை அளிக்கப் பட வேண்டும். பொது மன்னிப்பு வழங்கக் கூடாது.
- காவலர்கள் பாலியல் குற்றவாளிகளாக இருக்கும் வழக்குகளில், விசாரணை நடத்த தனி ஏற்பாடு, தானியங்கியாக நடக்க வேண்டும். புகாரைப் பதிவு செய்யவே அலைந்து திரிகிற நிலை இருக்கக் கூடாது.
- வாடிக்கையாகப் பின் தொடர்ந்து துரத்திக் கொண்டே வருவது (stalking), பாலியல் குற்றமாகக் கருதப் பட வேண்டும்.

டாஸ்மாக் மதுபான வியாபாரம், தமிழகத்தில், விற்பனை இலக்கு வைத்து, சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கிறது. பார் வசதி உண்டு என்று விளம்பரப் படுத்தப் படுகிறது. குடி குடியைக் கெடுக்கும் என்று போட்டு விட்டு, அப்படிக் குடியைக் கெடுத்து வருமானம் ஈட்டுவது அரசுக்குத் தேவையா? விற்பனையை ஊக்கப் படுத்துபவர்கள் எப்படி, போதைக்கு எதிரான பிரச்சாரம் செய்வார்கள்? போதை தான் வன்முறைக்குப் பிரதான காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முத்திரை குத்த முடியாவிட்டாலும், அது ஒரு முக்கிய காரணி என்கிற அடிப்படையில், அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முதலில், அரசு, இதை வருமானம் தரக் கூடிய தொழிலாகப் பார்க்கக்கூடாது. பொதுமக்கள் அதிகம் நடமாடும் இடங்களில் பேருந்து நிலைய வளாகம், ரேசன்கடைகள், கல்வி நிலையங்கள், குடியிருப்புப் பகுதிகள், வழிபாட்டுத் தலங்கள், ஆறு, குளம், குட்டை, மார்க்கெட் மதுபானக் கடைகளை அனுமதிக்கக் கூடாது. ஏற்கனவே ஒரு கடை இருக்கும் இடத்தில், இன்னொரு கடைக்கு உரிமம் வழங்கக் கூடாது. பகல் நேரத்தில் விற்பனை கூடாது. 18 வயதுக்குக் குறைவானவர்களுக்கு விற்கக்கூடாது. மறுபுறம் போதை பழக்கத்துக்கு எதிரான பிரச்சாரத்தை வலுவாக மேற்கொள்ள வேண்டும்.

**கற்பழிப்பா, வன்புணர்வா?**

கற்பழிப்பு என்ற வார்த்தை பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது. பாலியல் ரீதியான தாக்குதலைக் கற்புடன் சம்பந்தப்படுத்துவது, அதுவும் பெண்ணின் கற்புடன் மட்டும் தொடர்புபடுத்துவது கொடுமையிலும் கொடுமை. பாலியல் வல்லுறவு அல்லது வன்புணர்வு என்பதே இக்குற்றத்தை விவரிக்கும் சரியான வார்த்தையாகும். இதில் கற்பு அழிகிறது என்ற அடிப்படையில் தான், பாதிக்கப்பட்ட பெண், குற்றவாளியையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது பலரால் தீர்வாக முன் வைக்கப் பட்டது. இதை உடைக்க, பெண்கள் இயக்கங்கள் தொடர் பிரச்சாரம் செய்ய வேண்டியிருந்தது. தற்போதைய சூழலில் கும்பல் வன்புணர்வும், குழந்தைகளே பாதிக்கப்படுவதும் அதிகமாகும் போது, திருமணம் தீர்வாக முடியாது, குற்றவாளி தண்டனைக் குரியவன் என்ற புரிதலுக்கு சமூகம் வருகிறது.

**பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்:**

அலுவலக ஊழியராக இருந்தாலும், முறை சாரா தொழிலாளியாக இருந்தாலும், தகவல் தொழில் நுட்பத் துறையில் பணி புரிபவராக இருந்தாலும், வேலை செய்யும் இடத்தில் பாலியல் துன்புறுத்தல் என்பது மிகுந்த தொல்லையாகவும், மன உளைச்சலைக் கொடுக்கும் பிரச்னையாகவும் இருக்கிறது. இது, குற்றம் என்று சமூகம் உணர்வதற்கே நீண்ட காலம் பிடித்தது. சமீபத்தில் கூட, ஒரு சென்னை மாநகராட்சி ஊழியர், மேலதிகாரியின் பாலியல் இம்சையால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாகத் தற்கொலைக்கு முயற்சித்தார். பஞ்சாபில், ஐஏஎஸ் அதிகாரி ரூபன் தியோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஜாஜிடம் பாலியல் தொந்தரவு செய்த காவல் துறை இயக்குநர் கே.பி.எஸ்.கில் மீது, 8 ஆண்டுகள் கழித்து நீதிமன்றம் மிகச் சிறிய நடவடிக்கை எடுத்த போது, பல ஊடகங்கள், இதெல்லாம் ஒரு பிரச்னையா, இதற்குப் போய் தண்டனையா என்று தான் எழுதின. ஆனால் இன்று, அதைத் தடுக்க ஒரு சட்டமே வந்துள்ளது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள இச்சட்டம், விதிகள் உருவாக்கப்பட்டு அமலுக்கு வரும். கல்வி நிலையங்கள் உட்பட இச்சட்டத்தின் கீழ் வருவது நல்ல அம்சம். 1997ல் விஷாகா Vs ராஜஸ்தான் மாநில அரசு வழக்கில் உச்சநீதி மன்றம் வெளியிட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இச்சட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இதைச் சட்டமாக்குவதற்கான நிர்ப்பந்தத்தை மார்க்சிஸ்ட் கட்சி தொடர்ச்சியாக அரசுக்கு அளித்து வந்தது. சமீபத்தில் உச்ச நீதிமன்றம் மீண்டும் இந்த வழிகாட்டுதல்களை உறுதி செய்து தீர்ப்பளித்திருக்கிறது. அமைப்பு சார் துறையாக இருந்தாலும், அமைப்புசாரா துறையாக இருந்தாலும் புகார் குழுக்கள் அமைக்கப் பட வேண்டும் என்பது வலியுறுத்தப் பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பணி செய்யும் இளம் பெண்கள், கம்பெனி வாகனங்களில் பயணிக்கும் போது, பாலியல் வன்முறை நடக்கிறது என்ற பின்னணியில், வாகனமும் பணியிடம் என்று கருதப் பட வேண்டும், அதற்குள் பாதுகாப்பு என்பதும் நிர்வாகத்தால் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சைபர் குற்றங்கள்:**

வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியும் பாலியல் துன்புறுத்தல் செய்யப் படுகிறது. வலை தளம் இதற்கு வெகுவாகப் பயன்படுத்தப் படுகிறது. சைபர் கிரைம் என்று இது அழைக்கப் படுகிறது. போன் மூலம் ஆபாசமாகப் பேசுவது, ஆபாச குறுஞ் செய்திகளை அனுப்பித் தொல்லை கொடுப்பது சகஜமான விஷயமாக மாறிக் கொண்டிருக்கிறது. சில விஷமிகள், சம்பந்தப் பட்ட பெண்களுக்குத் தெரியாமலே அவர்களது படத்தை வலை தளத்தில் விபச்சார தொழில் செய்பவர் என்று பதிவு செய்து விடுவார்கள். போன் நம்பரையும் கொடுத்து விடுவார்கள். போன் வர ஆரம்பிக்கும் போது தான், பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரியவரும். சமீபத்தில், காடம்பாறை பகுதியில், அரசு துறைக்குச் சொந்தமான ஒரு தங்குமிடத்தில், உதவி பொறியாளர் ஒருவர் கேமராவை மறைத்து வைத்து, அங்கு வந்து குளிக்கும் பெண்களைப் படம் எடுத்து சிடி போட்ட செய்தி பத்திரிகைகளில் பரவலாக வெளி வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு ஏன், ரயில் நிலையங்களில், பஸ் நிறுத்தங்களில் அவசரத்தில் காலைத் தூக்கி வைத்துப் படி ஏறும் போது, குனிந்து சூட்கேசை எடுக்கும் போது போன்ற தருணங்களில் மொபைல் கேமராவில் படம் எடுத்து, அதை இணைய தளத்தில் உலவ விடுகின்றனர்.

சில வழக்குகளில், பலாத்காரமும் செய்து, அது முழுதையும் செல் போனில் படம் பிடித்து, அதை வைத்து மிரட்டியே மீண்டும் பாலியல் தாக்குதலுக்கு உட்படுத்துவது, வெளியே சொல்லக் கூடாது என மௌனமாக்குவது போன்ற சம்பவங்களும் நடக்கின்றன. புதுக்கோட்டையில் ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து, முழுவதையும், அவளுக்குத் தெரியாமல் படம் எடுத்து, எம்.எம்.எஸ். மூலம் பலரது மொபைல் போனுக்கு அனுப்பி வைத்திருக்கிறான் ஒரு கொடுமைக்காரன். அதுவும், உள்ளூரில் உள்ள பலருக்கு, குறிப்பாக, அப்பெண்ணின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் உள்ள பெரிய வகுப்பு மாணவர்களுக்கு! அந்தக் குடும்பமே இருக்கிற இடத்தைக் காலி செய்து விட்டு வெளியேறி விட்டது. இதில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வைக்க பெரும்பாடு பட வேண்டியிருந்தது. எஸ்.பி. தலையீட்டுக்குப் பிறகும், காவல்நிலைய ஆய்வாளர் பல நாள் தாமதப்படுத்தினார். கண்டன இயக்கங்களுக்குப் பிறகே, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டு, குற்றவாளி கைது செய்யப்பட்டான்.

ஹரியானாவில் ஒரு சம்பவத்தில், இந்த வீடியோ வெளியிடப்பட்டால் நடக்கும் பின் விளைவுகளை எண்ணிப் பயந்து, பாதிக்கப்பட்ட ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டார். ஒரு வீடியோ, பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தைக்கே அனுப்பப் பட்டது. அதைப் பார்த்து அதிர்ந்து போன தந்தை, தற்கொலை செய்து கொண்டார். கொதித்தெழுந்த மாதர் அமைப்புகள் ஹரியானாவிலுள்ள ரோத்தக் நகர வீதியில் இறங்கின. குற்றவாளிகளைக் கைது செய்ய வக்கில்லாத காவல் துறை, போராடிய பெண்கள் மீது தடியடி நடத்தியது. மார்க்சிஸ்ட் கட்சி அரசியல் தலைமை குழு உறுப்பினர் பிருந்தா கராத் உள்ளிட்ட தலைவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளது.

- தகவல் தொழில் நுட்ப சட்டம் இத்தகைய சைபர் குற்ற வழக்குகளில் கையாளப் பட வேண்டும்.
- மாவட்டத்துக்கு ஒரு பிரிவு, காவல் துறையில் இதற்காக உருவாக்கப் பட வேண்டும். போதுமான பயிற்சி அளிக்கப் பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குடும்ப வன்முறை:**

**குடும்பத்தில் நடந்தாலும் குற்றம் குற்றமே:**

4 சுவர்களுக்குள் நடக்கும் இந்த வன்முறை, குற்றமென்று சமூகத்தின் கண்ணுக்குப் பதிவாகி, தடுப்பதற்கு ஒரு சட்டம் வர வேண்டும் என்பதற்காக, 16 ஆண்டுக் காலம் மாதர் அமைப்புகள் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது. அதன் விளைவாகவே, இடதுசாரிகள் ஆதரவுடன் ஐமுகூ1 ஆட்சி நடத்திய காலத்தில், 2005ல் இச்சட்டம் உருவானது. விதி முறைகள் உருவாக்கப் பட மேலும் ஓராண்டு ஆகி, 2006ல் தான் அமலுக்கு வந்தது.

அடித்தால் தான் வன்முறை என்கிற பழம் சிந்தனை உடைக்கப் பட்டு, உடல் ரீதியாக, மன ரீதியாக, பொருளாதார ரீதியாக, பாலியல் ரீதியாக வன்முறை நடக்கும் என்ற ஒரு பரந்த வரையறை இக்குற்றத்துக்கு உருவாக்கப் பட்டது. பிஜேபி ஆட்சியில், வாடிக்கையாக அடித்தால் தான் குடும்ப வன்முறை என்று சட்ட முன்வரைவே தயாரிக்கப் பட்டது. ஜனநாயக மாதர் சங்கம் உட்பட பல அமைப்புகள் களத்தில் இறங்கிய பின்னரே, அடுத்து வந்த காங்கிரஸ் அரசு, அதை நிராகரித்து மேற்கூறிய வரையறையை உருவாக்கியது. பிற சட்டங்கள், மனைவிக்குப் பிரச்னை வந்தால் மட்டுமே தலையிட்டன. அப்படியானால், திருமணம் நடந்தது என்பதையும், இவர் தான் மனைவி என்பதையும் நிரூபிக்க வேண்டும். இந்தச் சட்டம், சட்ட ரீதியான மனைவி என்று இல்லாமல், சேர்ந்து வாழும் பெண்ணுக்குப் பிரச்னை நடந்தாலும், ஒரே வீட்டில் வசிக்கிற இதர பெண் உறவினருக்குக் கொடுமை நடந்தாலும் நடவடிக்கை உண்டு என்று தெளிவுபடுத்தியிருக்கிறது.

குடும்பம் என்று இருந்தால், சின்ன சின்ன பிரச்னைகள் வருவது இயல்பு தானே, இதற்கெல்லாம் சட்டம் வந்தால் என்ன ஆவது என்ற கேள்விகள் எல்லாம், வெளியே வரும் அதிர வைக்கின்ற சம்பவங்களில் காணாமல் போய் விடுகின்றன. குடும்ப வன்முறை வழக்குகளில், தமிழகம் தான் முதலிடம் என்பதை மறந்து விடக் கூடாது.

தூத்துக்குடி மாவட்டத்தில் குரு ஈஸ்வரி என்ற பெண், திருமணம் செய்து கொண்டது தனது தாய் மாமனை; இரண்டு குழந்தைகள் உண்டு. கணவன் ராணுவத்தில் இருக்கிறார். ஒவ்வொரு முறையும் விடுப்பு முடிந்து திரும்பும் போது, மனைவிக்கு மொட்டையடித்து விடுவாராம். அப்போது தான் பார்ப்பதற்கு அசிங்கமாகி விடுவார் என்பதற்காக. அண்மையில், அவரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தம்பியும் சேர்ந்து, சந்தேகத்தின் பேரில், அந்தப் பெண்ணை நிர்வாணமாக்கி, சங்கிலியில் கட்டி, அறைக்குள் அடைத்து வைத்து, பட்டினி போட்டு, சிகரெட்டால் சூடு வைத்து, அவளது பிறப்புறுப்புக்குள் சுண்ணாம்பு தடவி, குப்பைகளைப் போட்டு படு பயங்கரமாக சித்திரவதை செய்திருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கட்சி, மாதர் சங்கம் தலையீட்டில் குற்றவாளிகளில் இருவர் கைது செய்யப் பட்டிருந்தாலும், பிரதான குற்றவாளிகளான கணவனும், அவரது தம்பியும் தலை மறைவாக உள்ளனர். இன்னும் கைது செய்யப்படவில்லை.

அதே போல், புதுக்கோட்டை மாவட்டத்தில், ஒரு நபர் பெயர் மாற்றி வைத்துக் கொண்டு, சென்னையில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, குழந்தையும் பெற்றுக் கொண்டு, பின்னர் நழுவி விட்டார். சென்னையில் ஒரு பெயர், புதுக்கோட்டையில் ஒரு பெயர். கேட்டால், நான் அவனல்ல என்று கூறுகிறார். இப்போது அவரே தான் இவரே, இவரே தான் அவரே என்று நிரூபிக்க மனைவி பிரம்ம பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார். மார்க்சிஸ்ட் கட்சி, பாதிக்கப் பட்ட பெண்ணை, அவரது மாமனார் வீட்டில் குடியேற்றும் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்து இயக்கம் நடத்தியது. அங்கிருந்த ஒரு டி.எஸ்.பி., போராட்டக்காரர்களைத் தர தரவென்று இழுத்து, வண்டிக்குள் போட்டுக் கைது செய்தார். குற்றவாளிகளை இப்படிக் கைது செய்தால், புதுக்கோட்டை மாவட்டம் எங்கேயோ போயிருக்குமே?

திருச்சியில் நடக்கும் ஒரு வழக்கில், விவாகரத்து கொடுக்க மறுத்த மனைவியை, வெளிநாட்டில் இருந்த கணவன், கூலிப்படையை ஏவி, கொலை செய்ய முயற்சித்தான். 52 வெட்டுக்களை வாங்கியும் உயிர் பிழைத்த மனைவி, இன்று நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். ஊர் திரும்பிய கணவனைக் காவல்துறை கைது செய்தது. ஆனால், 15 நாட்களில் ஜாமீன் கிடைத்து, கணவன் சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்க, மருத்துவ சிகிச்சை, வாழ்க்கை செலவுகள், குழந்தையின் படிப்பு என்று அந்தப் பெண் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

இதே திருச்சியில் ஒரு இஸ்லாமிய பெண்கள் பேரவை போட்ட போது, குடும்பத்துக்குள் நடக்கும் பல்வேறு வன்முறை குறித்துப் பகிர்ந்து கொண்டனர். ஒரு பெண் கூறினார் என் புருசனுக்கு அவங்க அண்ணி மேல ஒரு இது..ங்க. நான் சொன்னா கேக்க மாட்டாருங்க. எங்க ரூமிலேருந்து, உயரமான ஒரு ஜன்னல் வழியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்தா, அவங்க ரும் தெரியும். அதுக்காக, என்னய நிக்க வச்சு, என் கழுத்து மேல உக்காந்து, அவங்க செய்யறதெல்லாம் பாப்பாருங்க. என் கழுத்து நரம்பு பிசகிப்போயி, டாக்டர் கிட்ட வைத்தியம் பாத்துகிட்டேங்க!

**குடும்பத்தில் இதெல்லாம் சகஜமப்பா:**

ஒரு வருடத்துக்கு முன்னால், தர்ஷன் என்ற கன்னட திரைப்பட நடிகர், அவரது மனைவியை மிக மோசமாகத் தாக்கி, கழுத்தை நெரித்து, சிகரெட்டால் சூடு போட்டுக் கொடுமையான கொடுமை செய்தார். வீங்கிய கழுத்தோடு, அந்தப் பெண், மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். வெளிப்படையாகவே காயங்கள் தெரிந்தன. பெங்களூரில், ஜனநாயக மாதர் சங்கம், தர்ஷனைக் கைது செய்ய வேண்டும் என்று இயக்கம் நடத்தியது. உடனே, கன்னட திரைப்பட உலகம், குடும்பம் என்று இருந்தால், அடி உதை எல்லாம் சகஜம் தான், இதில் ஏன் மாதர் சங்கம் தலையிட வேண்டும் என்று விமர்சித்தது. சில நாட்களில், தர்ஷன் அடித்தது உண்மை தான், ஆனால், நிகிதா என்ற மற்றொரு நடிகை தான் தூண்டி விட்டார் என்ற செய்தி வெளியிடப்பட்டது. உடனே, திரைப்பட உலகம் கொதித்தெழுந்து, 'ஒரு குடும்பத்தைக் கெடுத்த குற்றத்துக்காக', நிகிதா, இனி 3 வருடங்களுக்கு நடிக்கக் கூடாது என்று தடை விதித்தது. இதற்கிடையே, தர்ஷனின் மனைவிக்கு ஏகப்பட்ட நிர்ப்பந்தம், புகாரை வாபஸ் வாங்கச் சொல்லி. வேறு வழியில்லாமல், அவரும், நான் கீழே விழுந்து அடி பட்டுக் கொண்டேன், யாரும் என்னைத் தாக்க வில்லை என்று மாற்றிச் சொல்லியும் விட்டார். நல்ல வேளையாக, நீதிபதி நியாயமாக நடந்து கொண்டதால், மீண்டும் உண்மையைக் கூறினார். அந்த அடிப்படையில், தர்ஷன் கைது செய்யப் பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டார். மாதர் சங்கம், நிகிதா மீதான தடையையும் எதிர்த்தது. அதன் தொடர்ச்சியாக, பலரும் குரல் எழுப்ப, திரைப்படத் துறை அந்தத் தடையை விலக்கியது.

தற்போது, தர்ஷன், ஜாமீனில் வெளி வந்துள்ளார். ஆனால், அவருக்கான டிமாண்ட் குறையவே இல்லை. பல படங்களில் நடிக்குமாறு, வாய்ப்புகள் குவிகின்றன.

இந்தப் பிரச்னையில், மனைவிக்கு அடி உதை, அதற்கு மேல், நிர்ப்பந்தம்! நிகிதாவுக்கு, தடை விதிப்பு! தர்ஷனுக்கு......? எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது என்பது இதற்குப் பொருந்துமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வருடங்களுக்கு முன்பு கடலூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில், இரண்டு சம்பவங்களில் கணவன் மீது விவாகரத்து வழக்கு எப்படித் தொடுக்கலாம் என்று, சாதி பஞ்சாயத்துக்கள், பெண்ணுக்கு அபராதமும் விதித்து, தோப்புக்கரணமும் போட வைத்தன. இதற்குப் பிறகு தான், சென்னை உயர்நீதிமன்றம், கட்ட பஞ்சாயத்துக்கள் சட்ட விரோதமானவை என்று தீர்ப்பளித்தது.

- குடும்பவன்முறை தடுப்புச் சட்டம் முறையாக அமலாக்கப் பட வேண்டும்.
- இதற்கான நிதி உதவியை மத்திய அரசு மாநிலங்களுக்குச் செய்ய வேண்டும்.
- குடும்ப உறுப்பினர் மேலே புகார் கொடுத்தாலும், சட்டத்தில் கூறியுள்ள படி, வசிப்பிடம், பாதுகாப்பு, ஜீவனாம்சம் கிடைப்பது உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
- குடும்பத்தில் பெண் செய்யும் பணிகளும், அவளது உழைப்பும் மதிப்பு நிறைந்தவை என்பது சமூகத்தின் கண்ணுக்குத் தெரிய வேண்டும்.
- பெண்ணைத் தாழ்த்தி வைத்திருக்கும் சடங்குகள், சம்பிரதாயங்கள் குறித்து பிரச்சாரம் செய்ய வேண்டும்.

மனைவி என்றாலும், விருப்பத்துக்கு விரோதமாகக் கணவன் பாலியல் வல்லுறவு செய்தால் அதையும் குற்றமாகக் கருத வேண்டும் என்ற கோரிக்கை தற்போது வலுப்பெற்று வருகிறது.

**குழந்தை வளர்ப்பு:**

பிரபல எழுத்தாளர் கமலா பாசின், வளர்ப்பிலேயே பாலின பாகுபாடு கட்டமைக்கப்படுவதை தெளிவாக விளக்குவார். திட்டுவது, கொஞ்சுவது துவங்கி, விளையாட்டுகள், பொம்மைகள் உள்ளிட்டு இதற்கான கருவிகளாக்கப்பட்டிருக்கும் நிலையை சுட்டிக் காட்டுகிறார். வீட்டு வேலை பெண் குழந்தைக்கும், விளையாட்டு ஆண் குழந்தைக்கும் என்ற நிலையும் நிலவுகிறது. அப்பா, அம்மாவை எப்படி நடத்துகிறார் என்பது முன்னுதாரணமாக இருக்கிறது. ஆண் எப்படி, பெண் எப்படி என்று குடும்பம் வார்த்து வைத்து விடுகிறது. அதாவது, ஒரு வார்ப்பை நோக்கி, வளர்ப்பு நகர்கிறது. இதில் மாற்றம் வர வேண்டும்.

அடுத்து, பாடத்திட்டத்துக்கு ஒரு முக்கிய பங்குண்டு. பெண் விடுதலை கருத்துக்களுக்கே இடமில்லாத, தற்போதைய சமூகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிநிலையைத் தக்க வைக்கிற அம்சங்களே கற்றுக் கொடுக்கப் படுகின்றன. NCERT பாட நூல்கள் கொஞ்சம் பரவாயில்லை. வகுப்பறை விவாதக் களமாக மாற வேண்டும். கருத்துக்கள் மோத வேண்டும். அதற்கு ஆசிரியர்கள் தயாராக வேண்டும். கடிவாளம் கட்டிய குதிரையைப் போல, பாஸ் மார்க்கை நோக்கியே சகலமும் வடிவமைக்கப் படுகிறது. கல்வி என்பது, என் சமூகத்தை, தேசத்தை நேர்த்தியாக வளர்த்தெடுக்க என்கிற நோக்கம் பின்னுக்குப் போய், மார்க்கெட் விரும்பும் பொருளாக உற்பத்தியாகின்றனர் மாணவர்கள். வணிகமயமாகும் கல்வியின் பக்க விளைவில் ஒன்றாக இது உருவாகிறது. இதிலெல்லாம் கூட மாற்றங்கள் தேவைப் படுகின்றன.

**கௌரவக் குற்றங்கள்:**

வாழ்க்கை துணையைத் தேர்வு செய்யும் உரிமை பரவலாக இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் பல்வேறு காரணங்களைச் சொல்லி, சமூகத்தால் மறுக்கப் படுகிறது. சாதி மறுப்புக் காதலும், திருமணமும் 21ம் நூற்றாண்டிலும் கூட, நடக்கக் கூடாத பாவமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக இளைஞன் தலித் வகுப்பு என்றால், சாதி தூய்மை கெட்டு விடும் என்று கூறி, பெண்ணின் உறவினர்கள் இருவரையும் தீர்த்துக் கட்டி, சாதியையும், குடும்ப கௌரவத்தையும் "பாதுகாக்கும்" பணியில் ஈடுபடுகிறார்கள்! சாதியம் என்ற ஜனநாயக விரோத, வஞ்சக, பாகுபாடுகளுக்குப் பல்லக்கு தூக்குகிற கேடு கெட்ட அமைப்பின் இழிவான வெளிப்பாடாக கௌரவக் குற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தஞ்சை சூரக்கோட்டையில், திருமணமாகி ஒரு வருடம் கடந்த பின்னும், அடங்கா சாதி வெறியுடன், தலித் இளைஞன் மாரிமுத்து கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டான். அவனது கழுத்து அறுபட்டிருந்தது. அவனது கையும், ஆணுறுப்பும் துண்டாக வெட்டப் பட்டுக் கிடந்தன. பெண்ணைத் தொட்ட கையும், உறவு கொண்ட உறுப்பும் கூடப் பழி வாங்கப் பட்டன. திண்டுக்கல்லில், பெண் காவலர் கன்னீஸ்வரி இதே காரணத்துக்காகப் படுகொலை செய்யப்பட்டார். நாகையில், சித்ரா என்ற பெண் அடித்தே கொல்லப்பட்டு, அந்த இளைஞன் தூக்கில் தொங்க நிர்ப்பந்திக்கப் பட்டான். சிவகங்கை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில், இளம் பெண்கள் இறப்பு அதிகமாக உள்ளது. தலைவலி, வயிற்று வலி என்று ஏதாவது காரணத்தைப் பெற்றோர்கள் சொல்லி விடுகிறார்கள். இவற்றுக்குப் பின்னால், கௌரவக் குற்ற நோக்கம் உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாதங்களுக்கு முன்பு, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் குரு, வேறு சாதி பசங்க நம்ம சாதி பொண்ணை தொட்டா, கைய வெட்டு என்று கௌரவக் குற்றத்துக்கு பகிரங்கமாக அறைகூவல் விட்டார். எந்தப் பொண்ணையும் அவ சம்மதமில்லாம எவன் தொட்டாலும், பாட்டாளி சொந்தங்களே கிளர்ந்தெழுங்கள் என்றால், அது அவரது பெண்ணுரிமை குறித்த பார்வையைக் காட்டுவதாகக் கொள்ளலாம். ஆனால், இது பகிரங்க சாதிய பார்வை. பெண்ணுரிமைக்கும் இதற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை.

இந்தக் கட்சியின் நிறுவனர் திரு.ராம்தாஸ், சாதி மறுப்பு திருமணத்துக்கு எதிராகத் தொடர்ந்து பேசி வருகிறார். 90% காதல் திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன, எனவே, இளம் பெண்கள் காதல் திருமணம் செய்யக் கூடாது என்று அறைகூவல் விட்டார். எங்கிருந்து இந்தப் புள்ளிவிவரம் கிடைத்தது என்று தெரியவில்லை. தலித் பசங்க, பகல் நேரத்தில கூலி வேலைக்குப் போவாங்க, சாய்ங்காலம் ஆனா, ஜீன்ஸ் பேண்டும், கறுப்புக் கண்ணாடியும் போட்டுகிட்டு, மத்த சாதி பொண்ணுங்கள மயக்க வந்துருவாங்க என்ற பேச்செல்லாம் கூட அடிபட்டது. கூலி வேலை செய்பவர்கள் கோவணம் தான் கட்டிக் கொள்ள வேண்டுமா? தலித் மக்கள் என்றால் கூலி வேலை தான் செய்ய வேண்டுமா? இல்லை, ஜீன்ஸையும், கறுப்புக் கண்ணாடியையும் பார்த்தாலே பெண்கள் மயங்கி விடுவார்களா? அவ்வளவு மூளை இல்லாதவர்களா?

நாடகக் காதல் என்பதை அடிக்கடி டாக்டர் ராம்தாஸ் விமர்சிக்கிறார். காதலித்து, கர்ப்பமாக்கிக் கைக் குழந்தையுடன் தெருவில் விடும் அவலத்துக்கு சாதி வித்தியாசமே கிடையாது. சட்டம், தற்போது, இதை வெறும் மோசடி என்று கருதி, குறைவான தண்டனையே வழங்குகிறது. மாதர் அமைப்புகள், இதற்கு ஒரு தனி குற்றப் பிரிவு வேண்டும் என்று கோருகிறார்கள். ஒட்டு மொத்தமாக இதை எதிர்க்காமல், சாதிச் சாயம் பூசுவது, சாதி ஆதிக்கப் பார்வையையே காட்டுகிறது.

சில சாதி சங்கங்கள், சாதி மறுப்புத் திருமணத்தை அனுமதிக்கக் கூடாது என்று தீர்மானம் போடுகின்றன. மார்க்சிஸ்ட் கட்சி சாதி மறுப்பு திருமணங்களை ஆதரிப்பதோடு, கௌரவக் குற்றத்தைத் தடுக்க தனி சட்டம் கோரி வருகிறது. பொதுவாக, கணவன் வீட்டாரால் பெண் மரணமடைந்தால், பெண்ணின் பெற்றோர்கள் புகார் கொடுக்க முன்வருவார்கள். கௌரவக் கொலைகளில், பெண்ணின் பெற்றோரே போட்டுத் தள்ளுகிற வேலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கும் போது யார் புகார் கொடுப்பார்கள் என்ற பிரச்னை எழுகிறது. எனவே தான் தனி சட்டம் தேவைப் படுகிறது. காங்கிரஸ் உள்ளிட்ட இதர கட்சிகள், வட மாநிலங்களில் கௌரவக் குற்றங்களைத் தூண்டுகிற சாதி பஞ்சாயத்துக்கள் மீது கை வைத்தால், ஓட்டு போய் விடும் என்பதற்காக மௌனம் சாதிக்கின்றன. பல்வேறு மாதர் அமைப்புகள் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சியின் நிர்ப்பந்தத்தால், கௌரவக் குற்றங்கள், கொலைகளைத் தடுக்க தனி சட்டம் குறித்து விவாதிக்க அமைச்சர்கள் குழு போடப்பட்டது. ஆனால், சமீபத்தில் சத்தமில்லாமல் கலைக்கப் பட்டு விட்டது. இது தான் அரசின் அரசியல் உறுதி!

இப்பிரச்னையின் மறுபுறமும் பெண்களை வன்முறைக்கு உள்ளாக்குகிறது. மேலே நாம் பார்த்த பிரச்னை, வாழ்க்கை துணையைத் தேர்ந்தெடுத்தால் நடக்கும் கொடுமை. ஒருவரை வாழ்க்கை துணையாகத் தேர்ந்தெடுக்க மறுத்தால் நடப்பதும் விபரீதமாக இருக்கிறது. காதலை ஏற்க மறுத்தால், அப்பெண் கொலை செய்யப்படுகிறாள். திராவகம் வீசி சிதைக்கப்படுகிறாள். நீ என்னைத் தான் காதலிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் கொடுத்துக் காதலை வாங்க முடியுமா? அது என்ன கடலை மிட்டாயா? யாரைத் திருமணம் செய்து கொள்வது என்று தீர்மானிக்க, பெண்ணுக்கு மட்டும் ஜனநாயக உரிமை மறுக்கப் படுவது நியாயமல்ல. திராவக வீச்சு வழக்குகளில், பாதிக்கப்பட்ட பெண்ணுக்குப் பெரும்பாலும் கண் பார்வை போய் விடுகிறது. மருத்துவ செலவு விண்ணை முட்டுகிறது. யதார்த்தத்தைப் புரிந்து இயல்பு வாழ்க்கைக்கு வரவே பல மட்ட உளவியல் உதவிகள் தேவைப்படுகின்றன. ஒரு நொடியில் கனவுகள் கலைந்து, வாழ்க்கை குலைந்து திடீரென சூனியத்தில் நிறுத்தப் படுவது எத்தகைய மன அழுத்தத்தை உருவாக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, மருத்துவ செலவு உட்பட்ட நிவாரணம், இழப்பீடு, மறு வாழ்வு, வேலை என்று பல்வேறு அம்சங்களும் சட்டத்தின் ஒரு பகுதியாக உறுதி செய்யப் பட வேண்டும். மறைந்த காரைக்கால் விநோதினியும், சென்னை வித்யாவும் நிஜசாட்சியாக இருக்கிறார்கள். அடர்த்தி அமிலம் விற்பனை செய்யப்படுவது குறித்து முறையான வழிகாட்டுதல் உருவாக்கப்பட வேண்டும்.

எனக்குக் கிடைக்காத இந்த உடல் வேறு யாருக்கும் கிடைக்கக் கூடாது என்கிற பார்வை தான் இந்தக் கொடுமைக்குப் பின்னால் பொதிந்து கிடக்கிறது. பெண்ணை உடலாக, சொத்தாக அணுகும் ஆணாதிக்கம் தவிர வேறு எதை இதில் பார்க்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணை, அங்கங்களின் தொகுப்பாக அல்லாமல், முழுமையாக, மனிதராக, மாண்புள்ளவராக அணுகும் போக்கை உருவாக்க வேண்டியிருக்கிறது.

பெண்கரு அழிப்பு, வரதட்சணை கொலை, துன்புறுத்தல்கள் தொடர் கதையாகவே இருக்கின்றன. சாதி, மத மோதல்கள் நடக்கும் போது, பெண்கள் குறி வைத்துத் தாக்கப்படுகிறார்கள். அண்மைக்கால உதாரணமாக, சிறுபான்மை பெண்கள் மீது குஜராத்தில் அரசின் ஆதரவுடன் நடந்தேறிய கொடுமைகள், ஓரிசாவில் கிறித்துவ கன்னியாஸ்திரிகள் மீது நடத்தப்பட்ட பாலியல் கொடுமைகள் பதிவாகியுள்ளன. ராணுவத்தின் அத்துமீறல்கள் குறித்து, குறிப்பாக காஷ்மீரில், வடகிழக்கு மாநிலங்களில் புகார்கள் எழுந்த வண்ணம் உள்ளன. சமூகம் ஒரே நபராய் எழுந்து நின்று ஒரே குரலில் கண்டனம் முழங்கினால், இக்குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

- மத மோதல், சாதி மோதல் சம்பவங்களில் குறிப்பிட்ட சாதியை, மதத்தை இழிவு படுத்தும் நோக்கத்துடன், திட்டமிட்டுப் பெண்கள் மீது இக்குற்றங்கள் நிகழ்த்தப் படுகின்றன. இத்தகைய பாலியல் குற்றங்களுக்குக் கூடுதல் தண்டனை வழங்கப் பட வேண்டும்.
- அதே போல், சாதிய, பொருளாதார, அரசியல் ரீதியாக செல்வாக்கு செலுத்தும் நபர்கள், ஆதிக்க நிலையில் உள்ளவர்கள், தாங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட பெண்கள் மீது பாலியல் குற்றங்கள் இழைக்கும் போது, கூடுதல் தண்டனை வழங்கப் பட வேண்டும்.
- ராணுவத்தினர் தவறுகளுக்குத் தண்டனை கிடைக்க, ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

**ஊடகங்களின் பங்கு:**

ஊடக சித்தரிப்பினால் தான் பாலியல் கொடுமைகள் நடக்கின்றன என்று ஒரு பகுதியினரும், மக்களிடம் இருப்பதைத் தான் ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன என்று மற்றொரு பகுதியினரும் வாத பிரதிவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். சமூகம் ஏற்றி வைத்திருக்கும் கருத்துக்களை, ஊடக சித்தரிப்பு வலுப்படுத்துகிறது.

உதாரணமாக, 20 வருடங்களுக்கு முன்பு வரை, கதாநாயகன் பெண்களிடம் தவறு செய்யாதவனாகவே சித்தரிக்கப் பட்டான். ஆனால், தற்போது சகஜமாக பல பெண்களிடம் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதும், அதைக் காதலியிடம் மறைப்பதும் நகைச்சுவையாகக் காட்டப்படுகிறது. இரு தார மணம் வராத மெகா தொடர்களே இல்லை. பாலியல் சீண்டல் கதாநாயக லட்சணமாகக் காட்டப் படுகிறது. அப்படிப்பட்டவனைத் துரத்தி துரத்திக் காதலிப்பவளாக பெண் சித்தரிக்கப் படுகிறாள். கூலிக்காக திருமணத்துக்கு முந்தைய இரவு மணமகளை வன்புணர்வு செய்தவனை, அந்தப் பெண் தேடிப் பிடித்துக் காதலித்து மணந்து கொள்வதாகக் காட்டுவது, பலாத்காரம் நடந்து விட்டால், இந்த அழுக்கான உடலோடு என்னால் வாழ முடியாது என்று உடனே தற்கொலையில் இறங்குவதாகக் காட்டுவது, பாலியல் வன்கொடுமை காட்சிகளை விஸ்தாரமாக சித்தரிப்பது போன்றவையும் திரைப்படங்களில் நாம் பார்க்கும் காட்சிகள் தான். பாலியல் தாக்குதலுக்கு உள்ளாக்கப் பட்ட பெண்ணை மணந்து கொள்ளும் கதாநாயகனை வாழ்க்கை கொடுக்கும் தியாகியாகக் காட்டுவார்கள். தறுதலையாக அலையும் கதாநாயகனை மணந்து கொள்ளும் பெண்ணுக்கு, இப்படி தியாகியாகும் பாக்கியம் கிடைப்பதில்லை. மது அருந்தும் காட்சிகளில் குடி குடியைக் கெடுக்கும் என்று எச்சரிக்கை வாக்கியம் போடுவது போல, பெண்ணின் மீதான பாலியல் வன்முறை காட்சிகளில், இது குற்றம் என்று எச்சரிக்கை வாக்கியம் போட வேண்டும் என்ற கோரிக்கை கூட எழுந்திருக்கிறது.

மறு புறம், விளம்பரங்களில் ஒரு சிக்லெட்டுக்காக, காருக்காக, பைக்குக்காக யாரோடு வேண்டுமானாலும் பெண் போவாள் என்கிற சித்தரிப்பு வருகிறது. அதாவது, அழைத்தால் வருவாள் என்ற தோற்றம் ஏற்படுத்தப் படுகிறது. விளம்பரத்தைப் பார்த்தெல்லாம் எனக்கு ஒன்றும் நேராது என்று வாதிப்பது பொருத்தமற்றது. நம்மை விட அதிகம் ஆய்வு செய்து தான் நிறுவனங்கள் விளம்பரம் தயாரிக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் அரை நிமிட விளம்பரத்துக்குச் செலவிடப் படும் தொகை, இங்குள்ள பல நிறுவனங்களின் ஓராண்டு வரவு செலவை விட அதிகம் என்பது கவனத்துடன் கணக்கில் எடுக்கப் பட வேண்டும்.

ஒரு சிவப்பழகு கிரீம் விளம்பரம், ஒரு பெண்ணை நிறத்துக்காக வெறுத்து ஒதுக்கியவன், அவள் சிவப்பான பிறகு மீண்டும் வந்து, இன்னொரு சான்ஸ் கிடைக்குமா என்று கேட்கும் போது, அந்தப் பெண் வெட்கத்துடன் அவன் மீது சாய்வது போலக் காட்டுகிறது. தன்மானம் கொஞ்சம் கூட இல்லாமல், சந்தர்ப்பவாதியாக, தன்னைத் துச்சமாக தூக்கி எறிந்தவனை, பெண் ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்பவளாகக் காட்டப் படுகிறாள். திறமையை விட, பெண்ணுக்கு அழகு முக்கியம், அதற்கு சிவப்பு நிறம் முக்கியம், எனவே அழகு சாதனப் பொருள் முக்கியம் என்று மார்க்கெட் செய்யப் படுகிறது. ஆணுக்கோ ஆண்மை முக்கியம் என்பது பொதுவான சித்தரிப்பு.

பெண்ணை லாகிரி வஸ்துவாக, அதாவது கவர்ச்சிப் பொருளாகக் காட்டுவதும் ஊடக சித்தரிப்பின் ஒரு பாதகமான அம்சமே. கவர்ச்சிப் பொருள் என்றால் விலை கொடுத்தோ அல்லது வன்முறை பிரயோகித்தோ அதை அடையலாம் என்பது தானே?

- படைப்பாளிகள் ஒரு சுய கட்டுப்பாட்டுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். சமூகத்தின் தரம் உயர்த்துகிற பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. உள்ளதைத் தானே சொல்லுகிறோம் என்கிற பெயரில் வக்கிரங்களை நியாயப்படுத்தும், பெருமைப்படுத்தும் வேலை எதற்கு?
- ஒவ்வொரு ஊடக நிறுவனத்துக்கும், பெண்கள் சித்தரிப்பு குறித்த ஒரு கொள்கை இருக்க வேண்டும்.
- ஆட்சேபணைக்குரிய சித்தரிப்பு வரும் போது, பொதுமக்கள் களமிறங்க வேண்டும். கண்டனத்தை தெரியப் படுத்த வேண்டும்.

**பாதிக்கப் பட்டவர்களின் பாதுகாப்பு:**

சில நாடுகளில், பாதிக்கப் பட்டவர்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் பாதுகாப்புக்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் இருக்கின்றன. இந்தியாவில் அது இல்லை. எனவே, அவர்களே சமாளித்துக் கொள்ள வேண்டும் அல்லது தலையீடு செய்கிற அமைப்புகள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது தான் நிலைமையாக இருக்கிறது. ஒரு கட்டத்தில், இவ்வளவு கஷ்டப் பட்டு, குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத் தர வேண்டுமா என்கிற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அமைப்புகளோ, மருத்துவ சிகிச்சை, விசாரணையின் போது உடன் இருந்து உதவுவது, வழக்குக்குக் காசு செலவழித்து அவர்களை அழைத்து வருவது, உளவியல் ஆலோசனைகளுக்கு ஏற்பாடு செய்வது என்று சகல பிரச்னைகளிலும் மூழ்கிப் போய் விடுகின்றனர், வழக்கு விசாரணைக்கு வருவதற்குள், அடுத்த பிரச்னை வந்து விட, அதைப் பார்க்க ஓட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. குற்றவாளிகளோ, அவர்களது நண்பர்களோ, அடிவருடிகளோ பாதிக்கப் பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணையும், அவளது குடும்பத்தையும் மிரட்டுவது வாடிக்கையாக நடக்கிறது. அதை சந்திப்பதற்கான தைரியத்தையும் அமைப்புகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் போதுமான நேரத்தை அளிக்க வேண்டியிருக்கிறது. எனவே, குற்றப் பத்திரிக்கை மீது கவனம், வழக்கு விசாரணை குறித்த தொடர் கவனம் போன்றவற்றில் இடைவெளி ஏற்பட்டு விடுகிறது. சில வழக்குகளிலேயே கடைசி வரை கவனம் செலுத்த முடிகிறது. குற்றவாளிக்குத் தண்டனையும், பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீடும் வாங்கித் தர முடிகிறது.

- சாட்சிகளைப் பாதுகாக்கும் ஏற்பாடு சட்ட ரீதியாக்கப் பட வேண்டும்.
- வழக்கு விசாரணைக்கு வந்து போவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டும்.

**ஏன் என்ற கேள்வி...... .**

இனி என்ன செய்வது, எப்படி தடுப்பது என்று பேசுவது தேவை தான்; ஆனால், ஏன் இப்படி நடக்கிறது என்பதும் யோசிக்க வேண்டிய பிரச்னை.

**அதிகரிக்கும் இடைவெளியின் தாக்கம்:**

எதற்கும் சம்பந்தமில்லாமல் குற்றங்கள் நடப்பதில்லை. வாழ்நிலை உணர்வுகளைத் தீர்மானிக்கிறது. அவ்விதத்தில் நவீன தாராளமயக் கொள்கை பொருளாதாரத்தின் மீது மட்டுமல்ல, சமூகத்தின் மீது, சமூக உணர்வுகளின் மீதும் தாக்கத்தை உருவாக்குகிறது என்பதைப் பார்க்கத் தவறக் கூடாது. தனிமனிதக் களியாட்டங்கள், மகிழ்விப்புகளே சுதந்திரம் என்பதாக முன் வைக்கப் படுகின்றன. நீ மகிழ, ரசிக்க, ருசிக்க எதை வேண்டுமானாலும் செய்யலாம், யாரையும் துன்புறுத்தலாம் என்கிற உணர்வு ஏற்படுத்தப் படுகிறது. ஒரு புறம், மூச்சு திணறுகிற அளவு பணம் கையில் புரளும் போது, ஆண்டவன் படைச்சான், எங்கிட்ட கொடுத்தான், அனுபவி ராஜான்னு அனுப்பி வச்சான் என்று தோன்றுகிறது. பணத்தால் சட்டத்தை வளைக்க முடியும், காவல் துறையை விலைக்கு வாங்க முடியும், ஊடகங்களின் ஒரு பகுதியை மௌனிக்க முடியும், பாதிக்கப் பட்டவர்களின் குரல்வளையை நெரிக்க முடியும் என்ற யதார்த்தம், எவ்வித மனக் கிலேசமும் இன்றி, குற்றம் செய்யத் தூண்டுகிறது. மறு புறம் வறுமை, இல்லாமை, அத்தியாவசியத்துக்கே போராட வேண்டும் என்ற அன்றாட வாழ்வு தருகிற விரக்தி, ஏமாற்றம், துயரம் அனைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் ஓர் ஆங்காரத்தையும், இனம் புரியாத வெறுப்பையும் வளர்த்து வன்முறையில் தள்ளுகிறது. உலகமயம், இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கிடையே உள்ள இடைவெளியை அதிகரிக்கிறது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. எனவே வன்முறை ஏறுமுகமாகிறது. ஏற்கனவே தாழ்மையான சமூக அந்தஸ்தில் உள்ள பெண்கள், இத்தாக்குதலுக்கு சுலபமான இலக்காகிறார்கள்.

**எது விற்கிறதோ அதை விற்பனை செய்**

இது உலகமயத்தின் தாரகமந்திரம். தாய்மையா, நட்பா, பக்தியா, தாம்பத்தியமா, பெண்ணின் உடலா எல்லாமே லாபம் பார்க்கத் தான். ஆபாசம் விற்கிறதா, அதை விற்பனை செய். மனைவியுடன் உறவு வைப்பதைக் கூட படம் எடுத்து, வலை தளத்தில் ஏற்று. வன்முறை விற்கிறதா, அதையும் ஓவர் டோசில் விற்றுத் தள்ளு என்பதே நடைமுறை. மார்க்கெட்டைப் பிடிக்கும் முன் மனதைப் பிடிக்க வேண்டாமா? சோப்பு தூள் விற்பனைக்கு, கறை நல்லது என்று கதை விடு. வாஷிங் மெஷின் வாங்குவது தான் பெண் விடுதலை, பெண் விடுதலை என்றால், நகத்துக்கு சாயம் பூசிக்கொண்டே துணி துவைக்க முடியும் என்றெல்லாம் எடுத்து விடு. முகத்துக்கான கிரீம் விற்க வேண்டும் என்றால், ஆறே வாரங்களில் சிகப்பழகு கிடைக்கும் என்று மோசடி செய். சிகப்பழகு கிடைத்தால், கை விட்ட காதலன் கை பிடிக்க வருவான், கிடைக்காத வேலை, தேடி வந்து கிடைக்கும் என்று ரீல் சுற்று. இப்படி எந்த மோசடிக்கும் உள்நாட்டு, பன்னாட்டு நிறுவனங்கள் தயார்.

மார்க்ஸ் அவர்கள், மூலதனம் நூலின் ஓர் அத்தியாயத்தில், ஜெர்மனியில் டி.ஜே.டன்னிங் என்ற தொழிற்சங்கத் தலைவர் கூறியதாக, மேற்கோள் காட்டியிருப்பது இன்றைய நிலைக்கு சாலப் பொருந்தும் "போதுமான லாபம் கிடைக்கும் என்றாலே மூலதனத்துக்கு தைரியம் வந்து விடும். 10% லாபம் நிச்சயம் என்றால் எங்கு வேண்டுமானாலும் போகும், 20% என்றால், எக்கச்சக்க ஆர்வம் வந்து விடும். 50% லாபம் கிடைத்தால் அடாவடி வேலைகளில் இறங்கும். 100% லாபம் நிச்சயம் என்றால், எவ்வித மனித உரிமைகளையும் காலில் போட்டு மிதிக்கும். 300% லாபம் கிடைக்கும் என்றால், எந்த அளவு வேண்டுமானாலும் தரம் தாழும், மூலதனத்தின் சொந்தக்காரனே தூக்கில் தொங்கினாலும் கவலைப்படாது". நினைத்தே பார்க்க முடியாத அளவு, பிரம்மாண்டமாக, குவிந்து கிடக்கும் நிதி மூலதனம் இப்போக்கை வலுப்படுத்தியிருக்கிறது என்பது உண்மை தானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் எதிரி?

நிதி மூலதனம் கண்டம் விட்டுக் கண்டம் தாவ, தடைகள் அகற்றப் பட வேண்டும் என்பது தான் உலகமயத்தின் தாத்பர்யம். அதற்கு ஏதுவாக, என் தேசம் என்ற உணர்வும், தேச பக்தியும் மட்டுப்படுத்தப்படுகிறது. அனைத்திற்கும் கதவை அகலத் திறப்போம் என்ற முடிவை அரசு எடுப்பதற்கு இது உதவுகிறது. போராடுவது வீண் என்ற மனப் போக்கு திட்டமிட்டு வளர்க்கப் படுகிறது. வர்க்கப் போராட்டத்தை விட, வன்முறையை மனம் நாடுகிறது. எதிரி யாரென்பதில் குழப்பம் வருகிறது. சுரண்டல் நிறைந்த முதலாளித்துவ அமைப்பும், ஏகாதிபத்தியமும் தான் தகர்க்கப் பட வேண்டும் என்பது பின்னுக்குப் போய், கண் முன்னே தெரிகிற சக மக்களின் ஒரு பகுதி இன்னொரு பகுதிக்கு எதிராக நிறுத்தப் படுகிறது. இனப் பிரச்னையாக, மொழிப் பிரச்னையாக, பாலின பிரச்னையாக இது பல வடிவம் எடுக்கிறது. அடையாள அரசியலாகவும் இது முன்னுக்கு வருகிறது. பின் நவீனத்துவம் போன்ற மார்க்சீய எதிர்ப்பு தத்துவங்கள் கூர்மையடைந்து, இதற்கு உரமிடுகின்றன. இது நாள் வரை சொல்லத் தயங்கிய கருத்துக்கள், வெறியூட்டும் பேச்சுக்கள் துணிச்சலாக முன்வைக்கப்படுகின்றன. செய்யத் தயங்கிய காரியங்கள், செய்து பார்க்கப்படுகின்றன. ஊடகங்களும், வலை தளமும் எல்லையற்ற வாய்ப்புகளை இதற்காக உருவாக்குகின்றன.

பெண்ணடிமைத்தனம் என்பது ஏதோ நில உடமை கால மிச்ச சொச்சம் அல்ல. வர்க்க சமூகம் உருவான காலம் தொட்டு வளர்ந்து வருகிற கருத்தியல்; முதலாளித்துவ அமைப்பு, முந்தைய கால பிற்போக்கு அம்சங்களைத் தகர்ப்பதற்கு பதிலாக, தன் வளர்ச்சிக்காக அவற்றைப் பயன்படுத்துகிறது என்று, மார்க்சிஸ்ட் கட்சியின் 20வது மாநாட்டு தத்துவார்த்த தீர்மானம் இன்றைய நிலையை சரியாக சுட்டிக் காட்டுகிறது. புதிய வகை வன்முறைகள் பெண்கள்மீது முதலாளித்துவ சமூகத்தில் ஏவப்படுவதை, அரசியல் தீர்மானமும் கணக்கில் எடுக்கிறது. உதாரணமாக பெண்ணடிமைத்தன சடங்குகள், சம்பிரதாயங்கள் நவீன முதலாளித்துவ சமூகத்தில் வழக்கொழிந்து போகவில்லை. மாறாக மார்க்கெட் செய்யப் படுகின்றன. வட இந்திய மாநிலங்களில் நிலவும் கர்வா சௌத் என்ற ஒரு சடங்கு (கணவனின் நலனுக்காக மனைவி இருக்கும் விரதம்) ஊடகங்களில் முக்கிய விஷயமாகக் காட்டப் படுகிறது. இதை செய்யாதவர்கள் பதிவிரதையாக இருக்க முடியாது என்கிற அளவுக்கு பில்டு அப் கொடுக்கப் படும். இதனால் பூஜைக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான பொருட்களின் விற்பனை நிச்சயம் அதிகரிக்கும். பெண் கரு அழிப்பு, நவீன தொழில் நுட்ப உதவியுடன் நடந்தேறுகிறது. வாடகை தாய் என்பது உட்பட்ட பல்வேறு விஷயங்கள் முன்னுக்கு வருகின்றன. அனைத்தும் விற்பனைக்கு என்ற இந்த நிலை பல அபாயங்களை உற்பத்தி செய்கிறது.

எனவே, வன்முறைக்குக் களம் அமைத்துக் கொடுக்கிற மார்க்கெட் சித்தாந்தம் எதிர்க்கப் பட வேண்டும். அதை ஏதுவாக்குகிற நவீன தாராளமயக் கொள்கைகள், நடவடிக்கைகளுக்கு எதிரான போர் வலுப்பட வேண்டும்.

**என்ன விலையும் கொடுப்போம்:**

வன்முறைக்கு உள்ளாக்கப் படும் பெண்கள் வெறும் புள்ளி விவரங்கள் அல்ல. வழக்கு எண் அல்ல. ரத்தமும் சதையுமான மனிதர்கள். அவர்களது உணர்வுகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். வாழ்க்கை உறுதி செய்யப்பட வேண்டும். நியாயத்துக்காகக் குரல் கொடுப்பவர்களாகப் பார்க்கப்பட வேண்டும். பல விதங்களில் அவதூறாக எழுதியும், பேசியும், அவர்களைக் குற்றவாளிகளாக முன்னிறுத்தி, மீண்டும் மீண்டும் அவர்களை பாதிப்படையச் செய்வது நிறுத்தப் படவேண்டும். நெருப்பில்லாமல் புகையுமா, இவ தான் மயக்கியிருப்பா, சொக்குப்பொடி போட்டிருப்பா போன்ற வாதங்களையும், முள்ளு மேல சேலை என்று கேட்டுக் கேட்டு சலித்துப் போன பழமொழிகளையும் போகி நெருப்பில் பொட்டுப் பொசுக்குவோம்.

புருஷன் வீட்டில் வாழப் போகும் பெண்ணுக்கும், தங்கச்சி கண்ணுக்கும் புத்திமதி சொல்லுவதை நிறுத்துங்கள். புருஷனுக்கும், தம்பிக் கண்ணனுக்கும் அறிவுரையை ஏற்றத் துவங்குங்கள். மகள், வீட்டுப் படி இறங்கும் போது, பத்திரமா போய்ட்டு வாம்மா என்று சொல்வதற்கு பதிலாக, மகன் வெளியே போகும் போது, பாத்து, மனுசனா நடந்துட்டு வாப்பா என்று கூட சொல்லலாமே?

அரசும், காவல்துறையும் தங்கள் கடமைகளை செய்யவேண்டும். அதே சமயம், எல்லா இடங்களிலும் அவர்கள் இல்லை, இருக்கவும் முடியாது. ஆனால், எல்லா இடங்களிலும் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் குரல் எழுப்ப முடியும். எனவே தானே, இருட்டையும், நடமாட்டமில்லாத இடங்களையும் சமூக விரோதிகள் தேர்வு செய்கிறார்கள். இது என் பிரச்னையல்ல என்று சமூகம் திரும்பிக் கொண்டால், சமூக விரோதிகளுக்குக் கொண்டாட்டம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி, இதில் நாம் என்ன செய்யப் போகிறோம்? செய்தித் தாள் படித்து விட்டுக் கண் கலங்குவதும், குற்றவாளிகளை சபித்துக் கொட்டுவதும் மட்டும் பலனளிக்குமா? பாதகம் செய்பவரை மோதி மிதி எனப் பாப்பாவுக்கே ஊக்கமளித்தான் மகா கவி பாரதி. ரௌத்திரம் பழகு என்று மக்களுக்குச் சொன்னான். எண்ணங்கள் நல்லவையாக இருந்தாலும், நடவடிக்கையில் கொஞ்சமாவது அது பிரதிபலிக்கா விட்டால், நல்ல எண்ணங்கள் கடலளவு இருந்தாலும் பயனில்லையே? மௌனத்தை உடைக்க வேண்டும். அநீதி நடந்தால் குரல் கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மை, சமூக பொது புத்தியாக, அதன் உள்ளார்ந்த அம்சமாக மாற வேண்டும். சுவாசிப்பதைப் போல, பசித்தால் உண்பது போல, பொது பிரச்னைகளில் தலையீடு இயல்பான அம்சமாக, அனிச்சை செயலாக மாற வேண்டும்.

தாக்குண்டால் புழு கூட துள்ளிக் குதிக்கும்; ஆறறிவு படைத்த மனிதர் நாம்! ஒன்று திரண்டால், எதையும் மாற்றும் வல்லமை நமக்கு உண்டு. சாமான்ய மனிதர்களின் கூட்டு உணர்வும், இயக்கமும் சரியான அரசியலின் கீழ் வலுப்பட்டால், வன்முறையற்ற சமூகத்தை உருவாக்க முடியும். ஆணாதிக்கம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவத்தின் இடுப்பெலும்பைத் தகர்க்க முடியும்.

ஆம், ஒவ்வொருவரும் அக்கினிக் குஞ்சாக அவதாரம் எடுப்பதே இன்றைய தேவை.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் மத்திய குழு உறுப்பினர். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநிலத் தலைவர்களில் ஒருவராக பணியாற்றி வருகிறார். பெண்ணுரிமை குறித்து பல்வேறு கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார்.

## உ.வாசுகி



இந்தியாவில் குடிமகள் என்ற அடிப்படையில் எழும் பொது ஒடுக்குமுறையோடு, சாதி, வர்க்கம், பாலினம் ஆகிய 3 மட்டங்களில் பெண் ஒடுக்கப் படுகிறாள். இந்த ஒடுக்குமுறைக்கு ஆணாதிக்கம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் முக்கிய காரணிகளாக அமைகின்றன. அனைத்து மட்டங்களிலும், அவள் மீது வன்முறை பிரயோகிக்கப் படுகிறது. எனவே, வன்முறைக்கு எதிரான பொதுக் கருத்தும், பொது கோபமும் உருவாக்கப் படுவதோடு, எதை நிலைநிறுத்த வன்முறை பயன்படுகிறதோ அந்த ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான உணர்வாகவும் அதை மாற்ற வேண்டிய தேவை இருக்கிறது. எவையெல்லாம் காரணிகளாக உள்ளனவோ, அவற்றைத் தகர்க்கவும் போராட வேண்டியிருக்கிறது.

0017170

thamizhbooks.com பாரதி புத்தகாலயம் புதிய புத்தகம் பேசுது

9 789382 826378 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org